விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 14 வெள்ளிக்கிழமை (31.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 316

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சிமெந்து ராம்கோ

# ஒட்டுமடத்தில் கோரவிபத்து; குடும்பஸ்தர் பலி; சாரதி தப்பியோட்டம்; சீருடையினர் அராஜகம்

(யாழ்ப்பாணம்)

வீதியின் கரையோரமாகச் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தரை மிக வேகமாக வந்த தனியார் பஸ் மோதியதில் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்– ஆலடிச் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் நாவாந்துறை வடக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் இரு பிள்ளைகளின் தந்தையும்

19 ஆம் பக்கம் பார்க்க....




## ஊடகவியலாளர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளரினையும் பொது மக்களினையும் யாழ்ப்பாணத்துப் போக்குவரத்துப் பொலிஸார் தாக்கியதில் பொதுமக்களுக்கும் பொலி

19 ஆம் பக்கம் பார்க்க....

## கொஸ்லந்தை மண்சரிவு

# வெளிநாட்டு உதவிகள் தேவையில்லை-அரசு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்த நிலைமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பினதோ அல்லது வேறு தரப்பினரது உதவியோ அவசியமில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்ட அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இதனை கூறியுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தத்திற்கு நிவாரண உதவிகளை வழங்க தமது அமைப்பு தயாராக இருப்பதாக ஐ.நா அமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஸ்டோஃபன் டுஜிரிக் நேற்று வெளியிட்டிருந்த அறிக்கை ஒன்றில் கூறியிருந்தார்.

எனினும் இலங்கை அரசாங்கம் உதவியை கோர வேண்டும் எனவும் அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் நாணயக்கார, நான் அறிந்த வரையில் தற்போதைக்கு உதவிகள் அவசியமில்லை.

19 ஆம் பக்கம் பார்க்க....

# 8 பேருக்கு மரணதண்டனை கொழும்பு நீதிமன்று அதிரடி

(கொழும்பு)

ஹெரோயின் போதைப்பொருளை கடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த ஐந்து இந்தியர்கள் மற்றும் மூன்று இலங்கையர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

தண்டனை வழங்கப்பட்ட இந்தியர்கள் தமிழ்நாட்டுத் தமிழர்கள் என வழக்கு விசாரணையின்போது அறிவிக்கப்பட்டது. தண்டனை வழங்கப்பட்டுள்ள எட்டு பேரும் கடந்த 2011ஆம் ஆண்டு இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். கிட்டத்தட்ட ஒரு கிலோ கிராம் எடையுள்ள ஹெரோயின் போதை பொருளை கடத்தியதாக குற்றஞ்சாட்டி சட்ட மா அதிபரினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையின் போது ஆட்சேபனை ஒன்றை சமர்ப்பித்த சந்தேக நபர்கள், கைதுசெய்யப்படும்போது தாங்கள் இலங்கைக்கு சொந்தமான கடற்பரப்பில் இருக்கவில்லை என்று தெரிவித்தனர். எனவே தங்களுக்கு எதிராக இலங்கை நீதிமன்ற

19 ஆம் பக்கம் பார்க்க....

# பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றவில்லை-ஐ.தே.க

(கொழும்பு)

மக்களின் உயிரைக் காப்பாற்றும் பொறுப்பினை அரசாங்கம் உரிய வகையில் நிறைவேற்றத் தவறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

மீரியபெத்த மண்சரிவு தொடர்பில் நேற்று நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கருத்து வெளியிட்ட கட்சியின் சிரேஷட உறுப்பினர் ஜோன் அமரதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் இப்போது என்ன சொன்னாலும் மக்களை பாதுகாக்கத் தவறியுள்ளது.

மீரியபெத்த மண் சரிவு அனர்த்தம் தொடர்பில் ஆழ்ந்த இரங்கலை கட்சியின் சார்பில்

19 ஆம் பக்கம் பார்க்க....


# பேருந்துக்கு தீ வைப்பு

## போர்க்களமானது ராமேஸ்வரம்

(ராமேஸ்வரம்)

தமிழக மீனவர்களின் தூக்கு தண்டனைக்கு எதிர்ப்பு தெரிவித்து பேருந்துக்கு தீ வைக்கப்பட்டது. ராமேஸ்வரத்தை அடுத்துள்ள அக்காமடத்தில் மீனவர்கள் பேருந்துக்கு தீ வைத்து எரித்தனர். இந்த தீ விபத்து சம்பவத்திற்கு பிறகு பேருந்துகள் இயக்கப்படுவது நிறுத்தப்பட்டது. மாணவிகளை பாம்பனிலேயே கல்லூரி பேருந்துகள் இறக்கி விட்டதால் 100 பேர் தவிப்புக்கு உள்ளாகினர்.

ராமேஸ்வரம்– ராமநாதபுரம் ரயில் தண்ட



19 ஆம் பக்கம் பார்க்க....

# இலங்கையில் முன்னேற்றமில்லை -ஐ.நா மனித உரிமைகள் குழு

(கொழும்பு)

இலங்கையில் போருக்கு பின்னர் பல முன்னேற்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனினும் பல விடயங்களில் இலங்கை முன்னேற்றம் காணவில்லை என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான ஐந்தாவது மீளாய்வு அறிக்கை நேற்று வெளியிடப்பட்டபோதே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இலங்கையால கடந்த 7ஆம் 8 ஆம் திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வு அறிக்கையின் மீதே நேற்று ஐக்கிய நாடுகள் குழுவின் கண்காணிப்பு வெளியிடப்பட்டது.

இலங்கையின் 18வது அரசியல் அமைப்பு சரத்தின் மூலம் நீதித்துறையின் சுதந்திரம் பாதிக்கப்பட்டு நீதித்துறையின் நியமனங்கள் யாவும் ஜனாதிபதியின் வசம் சென்றுள்ளன.

2013 ஆம் ஆண்டில் முன்னாள்

20 ஆம் பக்கம் பார்க்க....

# மோடி கவலை

(புதுடில்லி)

இலங்கையின் கொஸ்லந்தை மீரியபெத்த தோட்டத்தில் மண் சரிவில் உயிரிழந்த மக்களுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி தமது கவலையை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் மண்சரிவில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என்று பிரார்த்திப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மண் சரிவினால பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யவுள்ளதாக இந்திய உயர் ஸ்தானிகரகமும் அறிவித்துள்ளது.

20 ஆம் பக்கம் பார்க்க....

# நிபந்தனை அடிப்படையில் ஜனாதிபதியுடன் பேசத் தயார்

## சம்பந்தன் அறிவிப்பு

(கொழும்பு)

நிபந்தனை அடிப்படையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழர் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுத் திட்டம் காண்பது குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றைய தினம் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் ஜனாதிபதி மூன்று தடவைகள் வெளியிட்ட அறிக்கைகளின் அடிப்படையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் செய

20 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதுளை மண்சரிவு அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பதுளை கொஸ்லாந்தை மீரியபெத்தயில் ஏற்பட்ட பாரிய மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கும் நோக்குடன் வடக்கு மாகாணசபை முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் நோக்குடன் இன்று பிற்பகல் 3.30 மணியளவில் கைதடியிலுள்ள மாகாணசபையின் பேரவைச் செயலகத்தில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் பங்கேற்புடன் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த விசேட கலந்துரையாடலில் அனைத்து உறுப்பினர்களையும் தவறாமல் பங்கேற்குமாறு அவைத்தலைவர் கேட்டுக்கொண்ணார். (6)

## வடக்குக்கான பயணக் கட்டுப்பாடுகள் சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

வடக்கில் வெளிநாட்டுப் பிரஜைகள் பயுணங்களை மேற்கொள்வது தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகள் பிரிவினையை மேலும் வலுப்படுத்தும் என சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கிற்கு வெளிநாட்டுப் பிரஜைகள் பயணம் செய்வது தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் சிறுபான்மை சமூகத்தின் மீதான மற்றுமொரு மனிதாபிமானமற்ற அநீதியான ஒடுக்குமுறையாக கருதப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையானது சர்வதேச ரீதியிலும் உள்நாட்டு ரீதியிலும் அரசாங்கத்திற்கு எதிர்ப்பை சம்பாதித்துக் கொடுக்கும் என சுட்டிக்காட்டியுள்ளது.

பயணக் கெடுபிடிகளை ஒரு வகையில் பொருளாதாரக் கட்டுப்பாடாகவே கருதப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தமிழ் மக்கள் இலங்கையில் ஒடுக்கப்படுவதாகவும் இரண்டாம் தரப் பிரஜைகளாக கருதப்படுவதாகவும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்துள்ளது என குறிப்பிட்டுள்ளது.

இந்த நடவடிக்கையானது யாழ்ப்பாண பொருளாதாரத்தை மோசமாக பாதிக்கும் என தெரிவித்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் வடக்கு கிழக்கை விட்டு வெளியேறியவர்கள் வலுவான பொருளாதார நிலைமையைக் கொண்டிருப்பதாகவும் அவர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள இவ்வாறான கெடுபிடிகள் தடையாக அமையும் என சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் வட பகுதிக்கான பயணங்கள் தொடர்பில் பல நாடுகள் அறிவுறுத்தல் விடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

## முதலமைச்சர் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

பதுளை மாவட்டத்தில் கொஸ்லாந்தை பிரிவிலுள்ள ஹல்துமுல்ல – மீரியபெத்த தோட்டத்தில் கடந்த 29 ஆம் திகதி ஏற்பட்ட பாரிய மண்சரிவு அனர்த்தத்தில் 300 இற்கு மேற்பட்டோர் காணாமற்போயுள்ளதுடன் பலர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்ற செய்தி எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

ஏற்கெனவே பல இன்னல்களின் மத்தியில் வாழ்கின்ற மலையக மக்களுக்கு இந்த இயற்கை அனர்ந்தம் பேரழிவை ஏற்படுத்தியுள்ளமை அனைவரின் உள்ளங்களையும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

இவ் அனர்த்தத்தில் உயிரிழந்த எமது சகோதர சகோதரியர், குழந்தைகளை நினைவுறுத்தி வட மாகாணசபையின் சார்பிலும் வட புலத்திலுள்ள அனைத்து மக்கள் சார்பாகவும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் அவர் தம் உறவுகளுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு எம்மாலான அனைத்து நிவாரண உதவிகளையும் வழங்குவதற்கு நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்.

இன்று இது பற்றிய சகல நடவடிக்கைகளையும் எமது அலுவலர்கள் எடுத்து விரைவில் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று உதவிகளை வழங்குவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அராலியில் எறிகணை

(யாழ்ப்பாணம்)

அராலி சந்தியில் இருந்து 81 மில்லிமீற்றர் எறிகணை ஒன்று நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

அராலி சந்தியில் குப்பைகள் கொட்டும் இடத்தில் எறிகணை ஒன்று இருப்பதாக பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் இராணுவத்தினருடன் சென்று எறிகணையை மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ந்து, அவ்விடத்திலேயே இராணுவத்தினரின் குண்டு செயலிழக்கும் பிரிவால் எறிகணை செயலிழக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## கோரிக்கை நிறைவேறாவிடின் அரசை விட்டு விலகுவோம்

### அத்துரலிய ரத்ன தேரர்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்யப்படாவிட்டால் அரசாங்கத்தை விட்டு விலகுவது உறுதியானது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி முறைமையை ரத்து செய்து புதிய அரசியல் அமைப்பு ஒன்றை அறிமுகம் செய்யாவிட்டால், நிச்சயமாக அரசாங்கத்தை விட்டு விலகி பொது வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவளிக்கப்படும்.

ஜாதிக ஹெல உறுமய சில யோசனைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது.

பதினைந்து நாட்களுக்குள் இது குறித்த நிலைப்பாட்டை வெளியிடுவதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு அறிவித்துள்ளது.

இந்த யோசனைத் திட்டத்தினை நாடாளுமன்றில் சமர்ப்பித்து,விவாதம் நடத்தி நிறைவேற்றிக்கொள்ள முடியும் என நம்புகின்றோம்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய தரப்பினர் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும், ஜாதிக ஹெல உறுமய கட்சி நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்து, அரசியலமைப்பில் திருத்தம் செய்தால் மட்டுமே ஆளும் கட்சிக்கு எதிர்காலத்தில் ஆதரவளிக்கும்.

இந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது என அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.


## விற்பனைக்கு

எம்பிம் நகைக்கடை கவுண்டர் சோக்கேஸ், பலசரக்கு கடை சோக்கேஸ் நல்லநிலையில்விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0213205143

(காலை 9 மணி தொடக்கம் மாலை 6 வரையும் தொடர்பு கொள்ளவும்)

இடம்: நெல்லியடி

(சி-8917)


## மௌனமாக இருந்தே பழகிவிட்டோம் யுத்த கால பாதிப்பு தொடர்கிறது

### உளநல மருத்துவர்கள் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் யுத்தம் முடிவுற்ற பிற்பாடு மக்கள் மாற்றுக்கருத்துக்களினை முன்வைக்க முடியாத நிலையே தற்போதும் காணப்படுவதாக உளநல மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

வட மாகாண சுதேச வைத்தியத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் **சித்தம் அழகியார்** எனும் சிறப்பு நிகழ்வு உலக உளநல நாளையொட்டி யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்று காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய உளநல மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

யுத்தத்தின் போது அமைதியாக இருந்து பழகிப் பழகி யுத்தத்திற்கு பிற்பட்ட அதிகார முறைமையும் அதேபோன்று ஏற்றுக் கொண்டு மௌனமாக இருந்து பழகிவிட்டோம்.

சரியென்று நினைத்ததை சொல்கின்றோமில்லை; பிழையென்று தவறென்று கருதுவதனை வெளிப்படுத்துகின்றோமில்லை ஒரு மாற்றுக்கருத்தினை கூறுகின்றோமில்லை.

யுத்த காலத்தில் எமக்கு பாதுகாப்புத் தந்த சில பழக்க வழக்கங்கள் நடைமுறைகள் அபிவிருத்திக்கு தடைக்கல்லாக இருக்கின்றது.

பொதுவாக ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவர் காணாமல் போயுள்ளனர். வறுமை மற்றும் நிம்மதியற்ற வாழ்வு என்பன மக்களினை உளநல ரீதியாக பாதிக்கின்றது.

உயிரிழந்தவர்களினைக் கூட நினைவு கூர முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதோடு நினைவு கூரப்படுதல் அரசியல் மயப்படுத்தப்படுவதனால் அதற்குரிய பெறுமதியும் குறைக்கப்படுகின்றது.

மாற்றுக்கருத்துக்களினை முன் வைத்தால் என்ன ஆகுமோ என்ற பயத்தில் பெரும்பாலானோர் மௌனமாகவே இருந்து வருகின்றனர் என்று உரையாற்றியதோடு நாம் எங்கே செல்கின்றோம் எந்த திசையில் பயணிக்கின்றோம் செய்ய வேண்டியவை என்ன எனவும் கேள்வியெழுப்பப்பட்டது.

இந்நிகழ்வில் உளநல மருத்துவ நிபுணர் எஸ்.சிவயோகன் உட்பட பலர் உரையாற்றியிருந்தனர். (4)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## Faculty of Arts

University of Jaffna will entertain applications up to 08.11.2014 for the post of Visiting Demonstrator in Geographical Information System (GIS) and Remote Sensing (Planning/Geography)

**Qualifications :** A special degree in the field of Palanning/Geography

Salary : Rs. 600/- per hour

Application forms and other details may be obtained from the office of the deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of.the Bursar, University of Jaffna.

Applications for the above posts should be sent to the deputy Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

Registrar (C-8918) 2014.10.30


## ஜப்பான் தூதுவர் - முதல்வர் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் நொபுஹிட்டோ ஹோபு அடங்கிய குழுவினர் நேற்று பிற்பகல் வடமாகாண முதலமைச்சரை அவரது அலுவலத்தில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் போது வடக்கின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் முதலமைச்சரிடம் ஜப்பான் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சாய்ந்து வீழ்ந்தது ஒதியமரம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் அமைந்துள்ள பழைய சந்தைக்கு அருகாமையில் நின்ற மிகவும் பழைமை வாய்ந்த ஒதிய மரம் ஒன்று அடியோடு முறிந்து வீதிக்கு குறுக்கு நேற்று சாய்ந்துள்ளது.

இதன் அடிப்பகுதி ஏற்கனவே உக்கிய நிலையில் காணப்பட்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவில்லை என பொது மக்கள் தெரிகிக்கின்றனர்.

இந்நிலையில் நேற் றைய தினம் குறித்த மரம் வீதிக்கு குறுக்காக சாய்ந்தபோது தெய் வா தீனமாக உயிர்சேதம் ஏற் படவில்லை.

இதனால் போக்கு வரத்து தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-271)

# 206 போர்க் கப்பல்கள் இலங்கைக்கு வருகை

## கடற்படை பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

2010 ஆம்ஆண்டுமுதல்2014 ஆம்ஆண்டு வரையான காலப்பகுதில் இலங்கைக்கு வெளிநாட்டு போர்க்கப்பல்கள் 206 வருகை தந்துள்ளதாக கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணசூரிய தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடகமையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போது, அண்மையில் சீன கப்பல்கள் இலங்கைக்கு வருகை தந்தமை தொடர்பில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச நாடுகளின் போர்க்கப்பல்கள் தமது பயணப்பாதையில் உள்ள நாடுகளுக்கு செல்வது சாதாரணமான ஒரு விடயம்.இது அனைத்து நாடுகளிலும் நடைமுறையில் உள்ளது.

இலங்கைக்கு சீன போர்க்ப்பல்கள் மாத்திரம் வருகை தரவில்லை. 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு போர்கப்பல்கள் 206 வந்துள்ளன.

2010ஆம் ஆண்டு 36 போர்க்கப்பல்களும் 2011ஆம் ஆண்டு 49உம், 2012 ஆம் ஆண்டு 34உம், 2013ஆம் ஆண்டு 48 உம், 2014ஆம் ஆண்டு 39 போர்க்கப்பல்களும் வந்துள்ளன.

2014ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த வெளிநாட்டு போர்க்கப்பல்களில், சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பாகிஸ்தான், ஜப்பான், பங்களாதேஷ், இந்தியா, ரஷ்யா, அவுஸ்திரேலியா உட்பட பல சர்வதேச நாடுகளின் போர்க்கப்பல்கள் அடங்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)


# விசேட சலுகை

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

**முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532
Valampuriijaffna@gmail.com



## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

### திருமதி பாமதி அமிர்தகுமார்



எமது குடும்ப விளக்கு திருமதி பாமதி அமிர்தகுமாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 01.11.2014 அன்று சனிக்கிழமை அராலி மத்தி, உலோக சிட்டிப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் ஆறுதல் வார்த்தை கூறியோருக்கும் மற்றும் வைத்தியசாலையில் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(8187)

குறிப்பு:- இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

(8187)

தகவல்
குடும்பத்தினர்.


# இராசி பலன்

31.10.2014
(ஐப்பசி 14, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை- 5.59 மணிக்கு
அட்டமி மாலை 6.23 மணிவரை
திருவோணம் பின்னிரவு 12.33 மணிவரை
இராகுகாலம்-10.33-12.03 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
இரண்டாம் ஐப்பசி வெள்ளி
கோஷ்டாஷ்டமி

வளவன்

**மீனம்:** வருமானம் உயர்வடையும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, உறவினர்கள் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**மேடம்:** செய்தொழில் மேன்மையுண்டு, வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**இடபம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ் தாபங்கள் அகலும், ஆன்றோர் சந்திப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வேலைச்சுமை கூடும், முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர் உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், மனச் சஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**கடகம்:** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், வெளியூர் பயணங்களால் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும், சுபநிகழ்வுகளில் கலந்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** தொட்ட காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்:** பகைவர்கள் விலகுவர், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள்.


**தனுசு:** குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய பொருட்சேர்க்கையுண்டு, சேமிப்பை உயர்த்துவதற்கான வாய்ப்புண்டு, தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**கன்னி:** மனநிறைவு கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், தடைப்பட்ட காரியமொன்று கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்வதேச சிறுவர் தின விழா இன்று

(தும்பளை)

யாழ். வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர், முதியோர் மாற்றுவலுவுடையோர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யா/ தாளையடி றோ.க.த.க பாடசாலையில் பிரதேச செயலர் ந. திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் தங்க வேல் கணேசமூர்த்தியும் சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி ச. திரவியராசாவும் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள தலைமைப்பீட சமூகசேவைகள் உத்தியோகத்தர் நா. ராஜமனோகரனும் யாழ். மாவட்ட செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ச.கோதையும் தாளையடி றோ.க.த. க. பாடசாலை அதிபர் க. சிவசுப்பிரமணியமும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-19)




# சூரன் போருக்குச் சென்றபோது சூறையாடிச் சென்ற திருடர்கள்

## 15 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், 3 இலட்சம் பெறுமதியான அமெரிக்க டொலர் அபேஸ்

(யாழ்ப்பாணம்)

**வீட்டிலிருந்தவர்கள் சூரன் போர் பார்க்கச் சென்றதை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட திருடர்கள் வீட்டிலிருந்த சுமார் 15 இலட் சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் 3 இலட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர் களையும் திருடிச் சென்றுள்ளனர் என சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வீட்டின் உரிமையாளரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

இந்த திருட்டுச் சம்பவம் யாழ். கைதடி வடக்கு ,கைதடி கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையிலுள்ள வீட்டிலேயே நேற்று முன்தினம் 29 ஆம் திகதி புதன்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது என வீட்டின் உரிமையாளரான ஜெயமலர் விக்னேஸ்வரன் என்பவரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கயிற்றசிட்டி கந்தசுவாமி கோவிலுக்கு சூரன் போர் பார்க்கச் சென்று விட்டு வீடு திரும்பிய போதே மேற்படி திருட்டுசம்பவம் இடம்பெற்றுள்ளமை வீட்டின் உரிமையாளருக்கு தெரிய வந்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை வீட்டுக்குள் ஏற்கனவே நுழைந்திருந்த திருடர்கள் தாம் வெளியில் செல்லும் வரை சமயம் பார்த்திருந்து மேற்படி திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸ் முறைப்பாட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இரவு வேளையே திருடர் கள் வீட்டுக்குள் நுழைந்திருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படித்திருட்டுச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதனால் மக்கள் பெரும் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து வரும் அதேவேளை பூர்வீக சொத்துக்களாகப் பேணி பாதுகாத்து வரும் தங்க நகைகளை ஒரே நாளில் முழுமையாக திருடிச் செல்வதால் மன வேதனைக்கும் அதிகளவில் ஆளாகின்றனர்.

மேலும் இவ்வாறான திருட்டுச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தவும் திருட்டுப்போன பொருட்களை மீட்டுத் தரவும் பொலிஸார் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ



யாழ்.தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சூரன் போர் திருக்காட்சி... (படம்:-மயூரன்)

# அச்சுவேலி-கொழும்பு புதிய பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

பயணிகளின் நன்மை கருதி இலங்கை போக்குவரத்து சபை அச்சுவேலியிலிருந்து கொழும்பு நோக்கி புதிய பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வட இலங்கை போக்குவரத்து சபையின் கோண்டாவில் பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார்.

குறித்த பேருந்து சேவையானது அச்சுவேலியிலிருந்து இரவு 7 மணிக்கு புறப்பட்டு 751 பாதை வழியாக தம்பாலை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஊடாகப் பருத்தித்துறை வந்து பருத்தித்துறையிலிருந்து இரவு 8 மணிக்கு புறப்பட்டு நெல்லியடி,கொடிகாமம் ஊடாக புத்தளம் பாதை, கொழும்பு, வெள்ளவத்தை, தெஹிவளை ஊடாக ரத்மலானை வரை சேவையாற்றவுள்ளது.

அதேபோன்று ரத்மலானையிலிருந்து மாலை 6.30 மணிக்கு புறப்பட்டு கடற்கரை வீதியூடாக வெள்ளவத்தை புகையிரத நிலையம் வந்து அங்கிருந்து இரவு 7.30 மணிக்கு புறப்பட்டு புத்தளம் பாதை வழியாக கொடிகாமம்- நெல்லியடி ஊடாக பருத்தித்துறை பேருந்து நிலையத்தை வந்தடைந்து 751 பாதை வழியாக வல்வெட்டித்துறை உடுப்பிட்டி, தொண்டைமானாறு ஊடாக அச்சுவேலி வரை சேவையாற்றும் என்வும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

# பரிசில் நாளும் நூல் வெளியீடும்

(கரணவாய்)

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் பரிசில் நாளும் நூல் வெளியீட்டு நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் திக்கம் மத்திய சனசமூக நிலைய தலைவர் க. சுதேஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யா/ நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் செ. சேதுராசா,யா/ திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலய அதிபர் க.இரவீந்திரன், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட குடும்ப மருத்துவத்துறை விரிவுரையாளர் வைத்தியகலாநிதி சு.குமரன் ,லண்டன் திக்கம் நலன் புரிச் சங்க இணைப்பாளர் யோ.ராஜ் மோகன்ஓய்வுநிலைமேலதிகமாகாண கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-60)

# அனுதாபம் மட்டுமல்ல பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் உதவிகளையும் வழங்க வேண்டும்

## மாவை எம்.பி. தெரிவிப்பு

பதுளை மாவட்டத்தில் ஏற்பட்ட மனித பேரவலத்திற்கு அனுதாபம் மட்டுமல்ல பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியும் வழங்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

பதுளை மாவட்டத்தில் கொஸ்வத்தைப் பிரிவில் ஹல்து முல்ல மீரியா பெத்த தோட்டத்தில் பாரிய மண்சரிவு ஏற்பட்டதனால் பாரிய மனிதப் பேரவலம் ஏற்பட்டுள்ளது. இதுவரை 300 பேர் வரையில் காணவில்லையென்றும் அவர்கள் மண்ணுக்குள் புதையுண்டிருக்கலாம் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. பலர் உயிரிழந்தமை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

அதைவிட அம்மக்களின் வீடு வாசல்களும் சொத்துக்களும் உடைமைகளும் மண்சரிவில் புதையுண்டு போயுள்ளன. தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றது. பாதைகள் மூடப்பட்டுள்ளன. மண்சரிவு அபாயம் அதிகரித்துள்ளது.

பேரவலத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு எம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதுமட்டுமல்ல பாதிக்கப்பட்ட அம்மக்களுக்கு உணவு, உடை, மருந்து வகைகள் உள்ளிட்ட வழங்க வேண்டிய உதவி நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

நாம் அப்பகுதிகளுக்குச் சென்று நேரடியாக வேண்டிய உதவிகளைச் செய்யவுள்ளோம்.

பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு வேண்டிய மனிதாபிமான உதவிகளை மனித நேயங்கொண்டு உதவுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அதன் பொருட்டு வடக்கு மாகாண சபையும் முதலமைச்சரும் பாதிக்கப்பட்ட இடங்களில் சம்பந்தப்பட்ட நிர்வாகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர்.

நாமும் அங்கு செல்வதற்கும் தேவைகளையும் அறிந்து கொள்வதற்கும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றோம்.

தோட்டத் தொழிலாளர் வசிக்கின்ற இடங்கள், மண்சரிவு ஏற்படும் பிரதேசங்களை அடையாளப்படுத்தி அந்த மக்களின் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசும் தோட்ட நிர்வாகமும் ஏன் முன் கூட்டியே எடுக்கவில்லை என்ற கேள்வியையும் எழுப்புகின்றோம் என அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ

# 48 மணித்தியாலம் தொடர் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

கரணவாய் கரவெட்டி சுயம்பு அருள்மிகு மேல் மருத்தூர் ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றம் மூத்த விநாயகர் கோவில் அன்னையின் அருளாசியுடன் யாழ். குடாநாட்டில் முதன் முறையாக நடத்தும் அகண்ட மந்திர உச்சாடன 48 மணித்தியால பிரார்த்தனை எதிர்வரும் மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல் எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை முற்பகல்10 மணி வரை கரணவாய் கர வெட்டி ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் இடம்பெறவுள்ளது. (இ-7-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் பொலிஸ் நிர்வாகம் நடைமுறையில்தான் உள்ளது

## யாழ்.வந்த பயங்கரவாத தடுப்பு குழுவிடம் அரச அதிபர்கள் கூட்டாக எடுத்துரைப்பு

வடக்கில் பொலிஸ் நிர்வாகம் நடைமுறையிலிருப்பதாகவும் குற்றங்கள் புரிந்தவர்கள் நீதிமன்றங்களின் ஊடாகவே தண்டிக்கப்படுவதாகவும் யாழ். வந்த ஐ.நா பயங்கரவாத எதிர்ப்புக்குழுவின் நிறைவேற்று குழுவிற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்கள் கூட்டாக தெரிவித்துள்ளனர்.ஐக்கிய நாடுகள் பயங்கரவாத எதிர்ப்பு குழுவின் நிறைவேற்று குழுவுக்கும் யாழ்ப் பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு யாழ். மாவட்ட செயலக கேட் போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போதே அரச அதிபர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இந்த சந்திப்பு குறித்து யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

பயங்கரவாத நடவடிக்கைகள் நிலவிய காலங்களில் இருந்ததைவிட தற்போது எந்தளவான முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று எங்களிடம் விளக்கம் கேட்டிருந்தனர். அத்துடன் மக்கள் தங்கள் உரிமைகளை எந்தளவுக்கு சுதந்திரமாக அனுபவிக்கின்றனர் என்பது தொடர்பிலும் கேட்டிருந்தனர். மீள்குடியேற்றத்தின் பின்னர் எவ்விதமான இயல்புநிலையில் மக்கள் வாழ்கின்றனர் என் றும் அந்த மக்களுக்காக வழங்கப்படும் சேவை கள் தொடர்பிலும் கேட்டறிந்தனர்.

மேலும் சிவில் நிர்வாக நடவடிக்கைகள் குறித்தும் குற்றங்கள் செய்தவர்கள் எவ்வாறு தண்டிக்கப்படுவதாகவும் கேட்டிருந்தனர். இவற்றிற்குநாங்கள்பதிலளிக்கையில்,

பொலிஸ் நிர்வாகம் நடைமுறையில் இருக்கின்றது. குற்றங்கள் செய்தவர்கள் நீதிமன்றத்தின் ஊடாக தண்டிகப்படுவதாக கூறினோம். மேலும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் திருப்தியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினோம்.

அத்துடன் மக்களுக்கிடையில் இருக்கின்ற ஒருங்கிணைப்பு தொடர்பில் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளோம் என சுந்தரம் அருமைநாயகம் மேலும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் ஐக்கிய நாடுகள் பயங்கரவாத எதிர்ப்புக் குழுவின் நிறைவேற்றுக் குழுவின் நிர்வாக இயக்குநர் ஜீன் பவுல் லபோர்ட், மக்கள் தொடர்பாடல் அதிகாரி மற்றியாஸ் சுந்ததோல்ம், பிரதிநிதி பிலிப் ஜே.வி. டிவேற், சிரேஷ்ட மனிதவுரிமைகள் ஆலோசகர் எட்வார்ட் ஜே. பிளைம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

# பரிசளிப்பு விழா

(கரணவாய்)

வடமராட்சி பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் பொ. அரவிந்தன் தலைமையில் இடம பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும் சிறப்பு விருந்தினராக புதிய யாழ். வைத்தியசாலை இயக்குநர் சி.குலேந்திரராஜாவும் கௌரவ விருந்தினராக இளைப்பாறிய அதிபர் ஆ.வடிவேலும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-60)

# தேசிய வாசிப்பு மாத நிகழ்வின் 10ஆவது ஆண்டு நிறைவு விழா

நல்லூர் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு தின விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திருமதி சித்திரா தயானந்தன், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச சபை உப தலைவர் கோமதி ரவிதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் விரிவுரையாளர் ஆ. நித்திலவர்ணன் நடுவராக கலந்து கொள்ளவுள்ள இன்றைய காலத்தில் மாணவர்களின் வாசிக்கும் ஆர்வம் குறைவதற்கு காரணம் குடும்ப சூழலா? சமூக சூழலா? எனும் தலைப்பிலான விவாத அரங்கும் வாசிப்பு மாத சித்திரப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களின் ஆக்கங்கள் உள்ளடங்கிய கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

மேலும் இந் நிகழ்வில் சிறப்பம்சமாக ஸ்ரிக்கர் வெளியீடு இடம்பெறவுள்ளதோடு, முதற்பிரசுரத்தை ஓய்வு நிலை அதிபர் சோ. பத்மநாதன் பெற்றுக்கொள்ளவுள்ளார்.(இ-5)

# உறவுகளுக்கு கை கொடுப்போம்

பதுளை மாவட்டத்தில் இடம்பெற்ற நிலச்சரிவு இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும் வழிவகைகள் குறித்து நேற்று யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க பணிமனையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியவற்றுடன் இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவு, நல்ல நிலையிலுள்ள உடுபுடைவைகள், ஆகியவற்றை சேகரித்தல், நிதியுதவி சேகரித்தல், மருத்துவ உதவிகளை வழங்கக் கூடிய வழிவகைகளை ஆராய்தல் என முடிவெடுக்கப்பட்டது.

உடுபுடைவைகள், உலர் உணவு நிதியுதவி போன்றறை பின்வரும் இடங்களில் வழங்கி பற்றுச் சீட்டை பெற்றுக் கொள்ள முடியும். யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க பணிமனை , பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்க பணிமனை, பல்கலைக்கழக ஊழியர் சங்க பணிமனை , பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பணிமனை ஆகிய இடங்களில் ஒப்படைக்க முடியும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# துக்க தினமாக அனுஷ்டிக்க அனைவரும் முன்வர வேண்டும்

(கொழும்பு)

பதுளை கொஸ்வததை மீரியாபெத்த தோட்ட கிராமத்தில் இடம்பெற்ற பாரிய மண்சரிவில் உயிரிழந்த எமது மக்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் இந்த தருணத்தில் அவர்களுடைய வருங்கால வாழ்வு நல்லதோர் ஒளிமயமானதாக அமைய வேண்டும். எனவே தமிழ் பேசும் மக்கள் ஆகிய நாம் அனைவரும் இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்க வேண்டும் என்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வைக் கட்டியெழுப்ப அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டும் என்பதுடன், மக்களின் மறுவாழ்விற்கு உதவ முன்வருகின்ற தன்னார்வ அரசசார்பற்ற தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். ஏனைய அமைப்புகளும் தங்களின் உதவிகளை செய்ய அரசாங்கம் தடைபோடாமல் இருக்க வேண்டும். எனவே இந்த துக்க நினைவில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனின் வேண்டுகோளிற்கு இணங்க நாமும் அவருடன் இணைந்து வடமாகாண தமிழ் பேசும் வர்த்த கர்கள் தங்களுடைய வர்த்தக நிலையங்களில் உணர்வுகளை வெளிக்காட்டும் முகமாக வெள்ளைக் கொ டிகளை பறக்கவிட வேண்டும் என முற் போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எஸ். விஜயகாந்த தெரிவித்துள்ளார். (இ)

**J.D.C.S.I. CATHEDRAL NURSERY VADDUKODDAI ADMISSION FOR THE YEAR -2015**

**மாணவர் அனுமதி- 2015**

1. விண்ணப்பப்படிவங்களை பாடசாலை நாட்களில் இயக்குநரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.
2. விண்ணப்பப் படிவங்கள் 01.11.2014 முதல் 02.12.2014 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
3. விண்ணப்பப் படிவங்கள் பூரணமாகவும் சரியாகவும் நிரப்பப்பட்டு இயக்குநரிடம் கையளிக்கப்பட வேண்டும்.
4. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 500/=
5. வயதெல்லைகள்:- 1. Level - 1: விண்ணப்பதாரி 01.02.2010 இற்கும் 31.01.2011 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
2.Level :-2 (Play Group) விண்ணப்பதாரி 01.02.2011 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

(8182) **செயலாளர், J.D.C.S.I. Cathedral**

**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 21 1/2
உயரம்: 6'
தகைமை/தொழில்:BSc/தனியார்
தொ.இ: B/3737

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 9 1/2
உயரம்: 6'
தகைமை/தொழில்: HNDA/ பட்டதாரி பயிலுனர்
தொ.இ: B/3741

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 80 செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L/அரசதொழில்
தொ.இ: B/3743

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 52
உயரம்: 5'8"
தகைமை/தொழில் :A/L/(கனடா) தொழில
தொ.இ: B/3745

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 8 3/4 சூரிசெவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச உத்தியோகம்
தொ.இ: G/3750

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 40
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3751

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 35
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்
தொ.இ: G/3752

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 43
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L/ தனியார் வேலை
தொ.இ: G/3754

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E.mail: kalyanamalai.jaffna@gmail.com
...து காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க பேருந்துகள் மீது இனம்தெரியாதோர் கல்வீச்சு

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் இலங்கைபோக்குவரத்து சபைக்குச் சொந்தமான இரு பேருந்துகள் இனந்தெரியாதோரின் கல்வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் புளியம் பொக்கணை சந்திக்கு அண்மித்த பெரியகுளம் வீதியில் வைத்து ஒரு இ.போ.ச பேருந்திற்கு நேற்று முன்தினம் இரவு கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் சாரதியின் இடது பக்க முன்பக்க கண்ணாடி உடைந்தது. முகமூடி அணிந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு நபர்கள் மேற்படி தாக்குதலை மேற்கொண்டு விட்டு மேற்படி பெரியகுளம் வீதி வழியாக தப்பி சென்றுள்ளனர்.

பேருந்தில் பயணித்த அனைவரும் கிளிநொச்சி டிப்போவிலிருந்து அழைத்து வரப்பட்ட பேருந்தில் பாதுகாப்பாக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்ட்டனர்.

தகவலறிந்த தர்மபுரம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து மேலதிக விசாரணை நடத்தியதோடு சேதமடைந்த பேருந்தை கிளிநொச்சிபொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்றனர். கிளிநொச்சி சாலைக்கு சொந்தமான பேருந்துகள் மீது மேற்கொள்ளப்பட்ட நான்காவது தாக்குதல் இது வென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கை போக்கு வரத்து சபையின் முல்லைத்தீவு சாலைக்குச் சொந்தமான மற்றைய பேருந்துக்கும் தண்ணீரூற்று பிரதேசத்தில் வைத்து கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சாரதியை இலக்கு வைத்து கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பேருந்துக்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் இதன் போது தெரிவித்தனர்.

வவுனியாவிலிந்து முல்லைத்தீவை நோக்கி பயணித்த பேருந்தை தண்ணீரூற்று பிரதேசத்தில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக சாரதி முறைப்பாடு செய்துள்ளார். இப்பேருந் தானது அண்மையில் முல்லைத்தீவு டிப்போவுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில்இவ்விருசம்பவங்கள்தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-2-282)

# மாகாண மட்ட வணிக போட்டி

(மல்லாவி)

வடமாகாண கல்வி திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கு இடையிலான மாகாண மட்ட வணிகப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆர்.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள் இப்போட்டியில் பங்கு கொள்வதற்கு வலயக் கல்விப்பணிப்பாளர்களை ஒழுங்குபடுத்துமாறும் இப்போட்டியில் நடுவர்களாக கடமையாற்ற வர்த்தக பாடசேவை கால ஆசிரிய ஆலோசகருடன் மூன்று பாடரீதியான ஆசிரியர்களையும் உரிய நேரத்திற்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறும் அவர் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ-2-15)

# சட்டங்கள் தொடர்பிலான விழிப்புணர்வு செயலமர்வு

ஒட்டுசுட்டான் பிரதேசசெயலக சிறுவர் மற்றும் பெண்கள் அபிவி ருத்தி பிரிவினரின் ஏற்பாட்டில் ஒட்டு சுட்டான் பிரதேச செயலகத்துக்குட் பட்ட கிராம அபிவிருத்தி சங்கமாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர் களுக்கான சட்டம் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வொன்றுஅண்மையில்ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.ஜெயந்திதலைமையில் ஆரம்பமானது. முல்லைத்தீவு மாவட்ட சட்ட உதவி ஆணைக்குழுவினுடையசட்டவாளர் N.நிர்த்தனருபன்சட்டம்தொடர்பான பல விடயங்களை வழங்கினார்.

தொடர்ந்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி வினோத், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் சிறுவர்களுக்கெதிரான வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாகவும் இவற்றை குறைப்பதற்கு அனைவரும் கைகோர்க்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்துஒட்டுசுட்டான்பிரதேச சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு குழு ஒன்றும்தெரிவுசெய்யப்பட்டது. (அ-28)

# 3 இலட்சம் ரூபா பணம் உரியவரிடம் ஒப்படைப்பு

## பொலிஸாரின் முன்மாதிரி

நினைவிழந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபரினால் கைவிடப்பட்ட சுமார் 3 இலட்சம் ரூபா பணத்தை மீட்ட போக்குவரத்து பொலிஸார் உரியவரிடம் ஒப்படைத்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி சிதம்பரநாதன் கடந்த 23 ஆம் திகதி மாலை பூந்தோட்டப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சமயம் தலைச்சுற்று ஏற்பட்டு மயங்கி மயக்கமடைந்ததில் காயமடைந்து வீதியால் வந்தவர்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவர்பயணித்த வேளை சுமார் 3 இலட்சம் ரூபா பணம் அவரது பையினுள்இருந்தது. இதன்போது அப்பணம் தவறவிடப்பட்டது.

அப்பணத்தினை மீட்ட போக்குவரத்து பொலிஸாரான பொலிஸ் சார்ஜன்ட் அருண பெரேரா மற்றும் பிலியன்ட் ரங்கா ஆகியோர் அவரிடம் ஒப்படைத்துள்ளனர். (அ-2-250)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 140 | 130 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 150 | 140 | 140 |
| தக்காளி | 120 | 180 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 | 50 |
| கோவா | 120 | 100 | 110 | 100 |
| கரட் | 120 | 100 | 100 | 160 |
| பூசணி | 20 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 100 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 250 | 280 | 250 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 200 | 260 | 250 | 120 |
| லீக்ஸ் | 160 | 150 | 150 | 140 |
| பீற்றூட் | 60 | 80 | 150 | 100 |
| கறிமிளகாய் | 160 | 140 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 60 | 100 | 100 | 120 |
| போஞ்சி | 160 | 280 | 230 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 140 | 160 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 160 | 130 | 130 | — |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 179


இரத்தினசபாபதி பாலராஜா




அற்புதராஜா முகேஷ்ராம்




துஷா துஷா



மூணு பேரு ஒரு பைக்ல போயிட்டு இருக்காங்க! அப்ப ஒரு டிராபிக் பொலிஸ் கை காட்டி நிறுத்த சொல்றாரு! அப்ப பைக்ல இருந்த ஒருத்தன் ரொம்ப கோபமா -யோவ்! ஏற்கனவே மூணு பேரு உட்கார்ந்து இருக்குறோம்! இதுல நீ எங்க உட்காருவ? என்று கேட்டான்...

**இது எப்படி இருக்கு?**


இரத்தினசபாபதி பாலராஜா

கூட படிச்சவன் நம்மளவிட அதிக மார்க் எடுத்தப்ப கூட வராத ஃபீலிங்க்ஸ்




நம்மளவிட சீக்கிரம் கல்யாணம் பண்றப்போ வந்து தொலையிது!

கரீஸ் குணம்




ராகுலன் பாலா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
## மாதிரி வினாத்தாள்- மேல்மாகாணம்

English

Three Hours

This question paper consists of Two Papers. In Paper I, There are Two parts. In part A, there are six contextual questions, and in Part B, there are two contextual questions on fiction and only ONE must be answered. In paper II At least **one** question from each sections Poetry, Prose, Ficton and Drama should be answered.

## PAPER I

### PART A

**Answer all the questions**

1. "Not only patience missing its reward, But one enduring wish for chances"
   a. where can you see these lines? whose work is this?
   b. What is the chance, someone enduring for?
   c. Explain the phrase ' patience missing its reward'

2. "Birds turn their heads as she approaches, Stare from the bushes at her blank- faced coaches"
   a. Name the work where do you find these lines?
   b. What/ Who is referred to as 'she?'
   c. What is mentioned as "her blank faced coaches?"

3. "In the vestibule below there was a letter box into which no letters would go and an electric button from which no mortal finger could coax a ring"
   a. From where are these lines taken? Who wrote them?
   b. Name the two items that the writer mentioned here?
   c. What does the writer come to say by mentioning these items?

4. "oh, dear, my legs are so tired! I can barely stand! I'm sorry, but I can't go a step further. I must creep into this cave and rest"
   a. Name the work of the above lines, and the writer.
   b. Who is the speaker? To whom does she/ he utter these words?
   c. What are the implecations of these words?

1. "It is a rediculous attachment" twittered the other Swallows; "she has no money, and far too many relations"
   a. Name the text of the above lines. Who's the author?
   b. What is the "rediculous attachment"?
   c. Who is 'she'? Explain the situation briefly.

2. " Then what abotu it" "I haven't got more than five minutes to spare"
   a. Where do you find these lines? Who is the writer?
   b. What is the situation that makes the speaker say these words?
   c. Do you think that the speaker is really in a hurry?

### PART B

When he opened his eyes in the morning, he saw pigeons tumbling in the dirty grey sky. They came whirring down in a flock to alight on the statue in the middle of the park where a man stood throwing handfuls of grain to them, and Hari watched delightedly as they waddled about on their pink pink claws, pecking and quarreling. Every morning this man came to scatter grain for the pigeons and Hari watched them come and feed. Then there was an old woman in a widow's white sari who brought a bag of flour to the park and painstakingly sprinkled a pinch of flour on every anthill along the paths. She herself was like an old white ant, bent and hunched, crawling along with her weak eyes bulging as she strained to find ants to feed. Hari watched her, wondering. He certainly would not have spent his money on feeding birds ands ants; he had his family to think of and was saving every rupee he earned for them.

1. Whose experience is this? Where is he now?
2. What are the two people doing?
3. How does the writer describe the old woman? Does this description convey a message?

4. Explain the following phrases.
   a. Handfuls of grain: ..................................................
   b. A bag of flour: ......................................................
   c. A pinch of flour:....................................................
   d. Painstakingly sprinkled:..........................................

"There is another thing that surprised me" Mr.Brocklehurst went on, "I find, when settling the house keeper's account, that an extra meal of bread and cheese has twice been served to the girls in the last fortnight. Who gave permission for this and by what authority"?

" I must take the responsibility for it Sir" replied Miss Temple. " The porride was so badly burnt that the girls could not possibly eat it"

"Madam. listen to me. You know that my plan in bringing up these children is to make them <u>hardy and patient and self denying</u>- not to encourage luxury and self- indulgence. <u>Any little disappointment. such as the spoiling of a meal. should be an occasion for the spiritual instruction of the pupils. teaching them strength through hardship.</u> Oh...! Madam. when you put bread and cheese into these children's mouths insteat of burnt porridge, you may feed their miserable bodies, but you little think how you starve their immortal souls!"

1. Who are the two people having this conversation?
2. What was the accusation being made? Do you think it is fair?
3. Explain the phrases which are underlined in your own words.
4. According to this story, do you think the speaker who made the accusation was actually thinking of the spiritual upliftment of the children. if not, why?

## PAPER II

### Poetry

" The Night Mail" is not only about a train, it is about people . Comment on this statement.

Paying Calls byThomas Hardy is a poem which pictures his great sense of humanity.

The characters and dialogues in " You are old father William" are unbelievably funny. Do, you agree? Give your reasons refering to the content of the poem.

It is quite interesting that the death of a little child is presented in the eye corner of an another little child. Describe taking examples from the poem " Mid- Term Break" by Seamus Heaney.

### Prose

" In ' The Dark Years' the reader finds Mandela's a true self as a son and a father" Is this a proper statement to introduce ' The Dark Years'?

" Outward beauty is nothing. It is just a show. The real beauties are love and sacrifices" Comment on this statement, by referring to the prose 'Happy Prince' by Oscar Wilde.

The real meaning of Christmas is metaphorically proved by O Henry in his short story 'The Gift of the Magi'. Do you agree this Statement? Give your comments on this.

The brutal death penalty of the innocent chimpanzee could have been avoided and the conflict between human beings and chumly could have been resolved in an amicable way" What's your opinion on this? Comment.

### Drama

Everyman is weak and undecided at the beginning but strong and decided at the end. Do you agree with this statement?

Overwhelmed by her American identity Mrs. Al Smith conducts hereself in an arrogant mannar and makes snobbish utterances. Discuss with examples how this helps to add to this comic elements of the play.

### Fiction

In the plot of 'The Village by the sea' Mr.Panwallah extends his enormous love and affection to Hari appearing as a parent of him. Do you agree with this statement? Describe taking examples from the novel.

'In the young jane Eyre one sees the potential to grow up into a women of intergrity and determination'. Is thiss true? Give your opinion on this statement.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## யாழ்.குடாநாட்டில் கண்டற்தாவரங்களும் அவை தொடர்பான எதிர்காலத் தேவைகளும்

(சென்ற வார தொடர்ச்சி...)

இவற்றிற்கான நிதிபற்றி அதிகளவில் கவலைப்படவேண்டியதில்லை. ஏனெனில் உலகளாவியரீதியில் சூழல் தொடர்பான அக்கறை உள்ள பல அரச,அரச சார்பற்ற நிறுவனாங்கள் என்றுமே தயாராகவே உள்ளன. குறித்த பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு அவர்களின் கல்வித்தகைமைக்கு ஏறபவேலைவாய்ப்பினையும் வழங்க முடியும். யாழ் குடாநாட்டின் மீன், இறால் உற்பத்தி என்பன கணிசமான அளவு உயர்வடையும். எமது மாவட்டத்தில் காணப்படும் கண்டற்காடுகள் சரியான பராமரிப்பின் மூலம் வளம்மிக்கதாக மாற்றிய பின் உள்நாட்டு, வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள் மூலம் அதிக வருமானத்தை பெற முடியும். எமக்கு இருக்கின்ற வளங்களை சரியானமுறையில் முகாமை செய்யாமல் இருப்பது நிகழ் காலச் சந்ததிக்கும், எதிர்கால சந்ததிக்கும் செய்யும் ஒருவரலா ற்றுத் தவறாகும். ஒருகண்டற் தாவரச் சூழற்தொகுதியில் இருந்து உச்ச பயன் அடையக் கூடிய வகை யில் நாம என்ன என்ன செய்ய வேண்டும் என்பதை கீழே உள்ளபடம் விபரிக்கின்றது.




☀ தற்போதுகண்டல் தாவரம் காணப்படும் பகுதி

✹ மீள் நடுகை செய்ய வேண்டியபகுதி

1 .பிரதேசமக்களின் வீடு
2 .உற்பத்தி,சேமிப்புபகுதி
3 .உணவுவிடுதி
4 .தற்காலிகஓய்வுவிடுதி
5 .மாணவர்களிற்கான ஆய்வு கூடப்பகுதி
6 .மாணவர்கள் தங்கும் விடுதி
7 .பிரதானகாவற்பகுதி
8 .காவற்பகுதி
9 பிரதானவீதி
10. Other vegetation
11. Salt marsh vegetation
12. கண்டல் காட்டுப்பகுதிக்கு செல்வதற்கான சிறியபாலம்
13. சுற்றுலாப் பயணிகள் ஓய்வெடுக்கும் பகுதி
14. மாணவர்கள் அவதானிக்கும் பகுதி
15 வள்ளம் நிறுத்தும் பகுதி
16 இயந்திரம் அற்றவள்ளங்கள் (மீன்பிடி சுற்றுலா)


இங்கு குறிப்பிடப்பட்டவை அனைத்தும்கண்டற்தாவரங்களையும்அங்கு வாழும் உயிரினாங்களை பாதிக்காத வகையிலும் அத்துடன் நாமும் உச்ச பயனைபெறும் வகையிலும் பேணுவது அவசியமான ஒன்றாகும்.

ஆரம்பத்தில் நாம் இடும் மூலதனம் பல நூறு வருடங்கள் தொடர்ச்சி யாகநமது சூழலை பாதுகாப்பாக வைத்திருப்பதோடுமிகப் பெரிய வருமானத்தைஎமக்கும் தொடர்ச்சியாகதந்த வண்ணம் இருக்கும். உயிரியல் ரீதியில் அங்குவாழும் தாவர,விலங்கு இனங்கள் செழித்து வளரவும் உதவும். இடம் பெயரும் பறவைகள் Migratory Birds) அதிக எண்ணிக்கையில் எமது பகுதிக்கும் வருகை தரும். இந் நடவடிக்கை சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும். அத்துடன் கண்டற் காட்டுப் பகுதியில் இருந்து குறிப்பிட்ட தூரம் வரைசுற்றிக் காணப்படும் ப்குதிகளினை அமைதியாகவும் சுற்றுச்சுழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கைத்தொழில் நிறுவனங்களைஅனுமதிக்காமல் வைத்திருப்பதும் அவசிய மானஒன்றாகும்.

கண்டற் தாவரங்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு கடுமையானதண்டனை முறைகளை அமுல்படுத்துவது கட்டாயமானதாகும்.


சுற்றுலா பயணிகள் ஓய்வெடுக்கும் இடம்


படகுப் பயணம்



மண்டைதீவு கண்டற்காடு


மீள் நடுகை


சிறிய பாலம்


விறகிற்காக வெட்டப்படும் கண்டல்

மண்டைதீவு கண்டற்காடு


நாகர் கோவில் கண்டற்காடு


Saltmarsh Plants


நாகர் கோவில் கண்டற்காடு

புஸ்பலிங்கம்சுரேந்தர்
Demonstrator
விலங்கியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## வாரத்திற்கு ஒரு புதிர்! 121

et al என்பதன் அர்த்தம் என்ன?

புதிர் 120 இற்கர்ன விடைகளை 10.11.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

திரு.க.கஜபதி
ஆசிரியர் பிரிவுA
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவராஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்;
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்

**புதிர் 120இற்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

எம். கார்த்திகா
152,கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

**புதிர் 120க்கான கேள்வியும் விடையும்:**
பிரதி எடுக்கும் இயந்திரத்தை (Photo copier) கண்டுபிடித்தவர் யார்?
Chestor Carlson

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல.121

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தடை நீக்கப்பட்டால் இந்தியாவிற்குத்தான் பாதகம்



## இலங்கை இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கத்தினை இந்தியா மேற்கொள்ளுமாயின் அது இலங்கைக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் அதேவேளை இலங்கையை விடவும் இந்தியாவிற்கே அதிக அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் எனவே, இந்தியா தனது பாதுகாப்பில் மிகச் சரியான முடிவெடுக்கும் என தெரிவிக்கும் இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய, ஐ.நா பயங்கரவாத எதிர்ப்பு நிறைவேற்றுக் குழுவின் கண் காணிப்பு நடவடிக்கைகள் விடுதலைப் புலிகள் தொடர்புபட்டதல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நகர அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் வாராந்த ஊடக சந்திப்பின் போது விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் மீதான தடையினை சர்வதேசம் நீக்குவது இலங்கையின் பாதுகாப்பு செயற்பாடுகளில் பாதிப்புகளை ஏற்படுத்தும். குறிப்பாக அண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நீதிமனறம் விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கத்தினை மேற்கொண்டதன் மூலம் ஐரோப்பாவில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்படும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறான நிலைமையில் இந்தியாவிலும் தற்போது விடுத்லைப் புலிகளின் தடைநீக்கத்தினை மேற்கொள்ள கோருவதானது இலங்கைக்கு சிக்கல்களை ஏற்படுத்தி விடும்.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகளினால் இலங்கை முப்பது வருடகாலமாக அச்சுறுத்தல்களை எதிர்கொண்டது. இதன் தாக்கம் இந்தியாவிற்கும் ஏற்பட்டது என்பதை மறந்து விடக்கூடாது. எனவே, விடுதலைப் புலிகளின் தடை நீக்கத்தினை இந்தியா மேற்கொள்ளுமாயின் இலங்கைக்கு பாதிப்புகள் ஏற்படும். அதேவேளை, இலங்கையை விடவும் இந்தியாவிற்கே பாரிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும். எனவே, இந்தியாவின் பாதுகாப்பு விடயத்தில் இந்திய அரசு மிகச் சரியான முடிவுகளையே எடுக்கும் என நம்புகின்றோம்.

மேலும், ஐ.நாவின் பயங்கரவாத எதிர்ப்பு நிறைவேற்றுக் குழுவின் இலங்கை விஜயம் பக்கசார்பானதாக தனிப்பட்ட காரணங்களுக்காகவோ அமையவில்லை அதேபோல் விடுதலைப்புலிகள் தொடர்பில் விசாரணைகளை நடத்தும் நோக்கத்திலும் அவர்கள் வரவில்லை. அவர்களின் கண்காணிப்பு செயற்பாடுகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் 1624 ஆவது பிரேரணைக்கு அமைவாக தமது செயற்பாடுகளை கண்காணிக்கவே வந்துள்ளனர்.

அதேபோல் இலங்கை அரசாங்கம் இக்குழுவினருக்கான அனுமதியினை வழங்கியிருப்பதனால் தனிப்பட்ட ரீதியில் இவர்களை கண்காணிக்கவோ அல்லது பாதுகாபு அமைச்சுடனான சந்திப்புகளை ஏற்படுத்தவோ அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

# மக்களுக்கு வலிக்காமல் வரி அறவீடு செய்ய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு தெரியும்

## இப்படிக் கூறுகிறார் மேர்வின் சில்வா

(கொழும்பு)

மக்களுக்கு வலிக்காமல் வரி அறவீடு செய்யும் வழிமுறைகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு தெரியும் என பொது மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டம் தொடர்பான இரண்டாம் வாசிப்பு விவாதத்தில் பங்கேற்ற போது அவர் இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் அனைத்து மக்களினசிரமங்களையும் கருத்திற் கொண்டே வரவு-செலவுத் திட்டத்தை தயாரித்துள்ளார். இதன் காரணமாகவே இந்த வரவு-செலவுததிட்டத்தில் மக்களுக்கு பாரியளவில் நலன்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மலர்களை நோகடிக்காது தேன் எடுப்பதனைப் போன்று மக்களுக்கு வலிக்காமல் வரி அறவீடு செய்ய அரசாங்கத்திற்கு தெரியும்.

நாட்டின் சகல பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் தற்போது வழங்கப்படும் தொகையை விடவும் அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என அமைச்சர் மேர்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (இ-5)

# அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளது

## சுவாமிநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டம் குறித்த நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

அரசாங்கம் மக்களுக்கு போலி வாக்குறுதிகளை அளித்து ஏமாற்றி வருகின்றது..

பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்குவதாக அரசாங்கம் உறுதியளித்திருந்தது. எங்கே அந்த பால்?

சம்பளம் மிகவும் சொற்ப அளவிலேயே உயர்த்தப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவுடன் இந்த சம்பள உயர்வினை ஒப்பீடு செய்ய முடியாது.

பொருட்களின் விலைகளை மக்களினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அன்றாடம் உணவு உட்கொள்ளக்கூட மக்களிடம் பணமில்லை.

வடக்கு கிழக்கு மக்களுக்கு வரவு செலவுத்திட்டத்தில் பணம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.



வடக்கு, கிழக்கு வாழ் இடம் பெயர் மக்களுக்கு வரவு-செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## வலது கை கொடுப்பது...!

தர்மம் தலை காக்கும்! இப்படி நம் முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்களே... எதற்காக?

எல்லோரும் தலையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவா

அப்படி இல்லை. ஒருவர் செய்கிற தர்மம் அவர் தலைமுறையையே காப்பாற்றும் என்பது அதன் பொருள்.

ஒரு பத்துக் காசை ஒருத்தருக்கு கொடுத்துவிட்டு ஊர் பூராகவும் அதைச் சொல்லிக் கொண்டிருப்பதற்கு பெயர் தர்மம் இல்லை. அது விளம்பரம்.

பசி என்று சொல்லிக் கொண்டு ஒருவர் வருகிறார். நாம் அவரைக் கூப்பிட்டு உட்காரவைத்து சோறு போடுகிறோம் என்றால்...

அவருடைய பசி தீர வேண்டும் என்பது ஒன்றே நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

அவர் கூடவே நாமும் உட்கார்ந்து சாப்பிட்டு அதைப் படம் பிடித்துப் பத்திரிகையில் போட வேண்டும் என்பது நோக்கமாக இருக்கக் கூடாது.

தர்மம் பண்ணுகிறவர்களுக்கு கர்வம் இருக்கக் கூடாது என்கிற கருத்தைப் புராணங்களே வலியுறுத்துகின்றன.

நான் கேள்விப்பட்ட கதை ஒன்று.

தருமரைப் பற்றி நமக்குத் தெரியும். அவர் ஏழை எளியவர்கள் பேரில் இரக்கம் கொண்டவர். தாராளமாகக் தர்மம் செய்கிறவர்.

அப்பேர்ப்பட்ட தருமருக்கே ஒருசமயம் தன் ஈகைக் குணத்தைப் பற்றி இலேசாகக் கர்வம் உண்டாயிற்றாம்.

கிருஷ்ணர் அதைப் புரிந்து கொண்டார்.

சரி... இவரை இப்படியே விட்டு விடக் கூடாது. கொஞ்சம் திருத்தி நல்வழிப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தார்.

ஒரு நாள் தருமரைத் தேடி வந்தார். அவரைப் பார்த்தார்.

வாயேன் இப்படி... கொஞ்சம் வெளியே போயிட்டு வரலாம் என்று வழக்கம் போலக் கூப்பிட்டார்.

தருமரும் உடனே புறப்பட்டார். இருவரும் சேர்ந்து போய்க் கொண்டு இருந்தார்கள். அப்படியே போய்க் கடைசியாக பாதாள லோகத்துக்குப் போய்விட்டார்கள். அப்போது அந்தப் பாதாள லோகத்தை மகாபலி சக்கரவர்த்தி ஆட்சி செய்து கொண்டிருந்தார்.

மகாபலி தான தர்மம் பண்ணுவதிலே ரொம்ப பெரியவர். அவரிடமிருந்த விருந்தோம்பல் பண்பை எல்லா உலகமும் பாராட்டிக் கொண்டிருந்து அந்தச் சமயத்தில்

தருமரும் கிருஷ்ணரும் அங்கே ஒரு தெரு வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

தருமர் ஒரு வீட்டுக்குப் போய் குடிக்கிறதுக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்க! என்று கேட்டார்.

அந்த வீட்டுக்கார அம்மா உடனே ஒரு தங்கக் கிண்ணத்திலே தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறார்.

தருமர் தண்ணீரை வாங்கிக் குடித்து விட்டு வெறும் கிண்ணத்தைத் திருப்பிக் கொடுத்தார். அந்த அம்மாள் அதைத் திரும்ப பெற்றுக் கொள்ள மறத்துவிட்டார்.

ஐயா! எங்க நாட்டிலே ஒரு தடவை கொடுப்பதைத் திருப்பி வாங்கிற பழக்கம் இல்லை. அதுமட்டுமில்லை. ஒரு தடவை உபயோகப்படுத்தினதை அது தங்கமாக இருந்தாலும் தூக்கி எறிஞ்சிடுவோம்!

தருமருக்கு இது வியப்பாக இருந்தது. அந்த நாட்டு மக்களின் செல்வச் செழிப்பைப் புரிந்து கொண்டார். அதன் பின்னர் தருமரும் கிருஷ்ணரும் புறப்பட்டு நேராக மகாபலி மன்னரின் அரண்மனைக்குப் போனார்கள்.

மன்னரிடம் தருமரை அறிமுகப்படுத்துகிறார் கிருஷ்ணர்.

இன்றைக்கு தரும புத்திரரைத் தங்களின் இராச்சியத்துக்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். அவர் தானதருமங்கள் செய்வதில் மிகவும் புகழ் பெற்றவர். ஒவ்வொரு நாளும் இவர் 500 பேருக்கு அன்னதானம் செய்கிறார்.

அதைக் கேட்டதும் மகாபலி என்ன பண்ணினார் தெரியுமா? உடனே தன்னுடைய இரண்டு காதுகளையும் கைகளால் பொத்திக்கொண்டார்..

நீங்க சொல்ற அந்தச்செய்தி என் காதிலே விழவேண்டாம். என்கிட்டே அதைச் சொல்லாதீர்கள் அப்படிப்பட்ட ஒருத்தரைப்பற்றி நான் கேட்டுக்கொண்டிருக்க தயாராக இல்லை. இங்கே என் இராச்சியத்தில் நான் தானம் கொடுப்பதற்கு எவ்வளவோ முயற்சி பண்ணுகிறேன். அதை வாங்கிக்கொள்வதற்கு ஒருத்தர் கூட கிடைக்கவில்லை அந்த நிலையிலே யாருமே இங்கே இல்லை.

ஆனால் நீங்களோ தர்மர். தினம் ஐந்நூறு பேருக்கு அன்னதானம் பண்ணுவதாக் சொல்றீங்க அப்படின்னா அவரோட இராச்சியத்திலே இலட்சக்கணக்கான ஏழைகள் இருக்கிறதாக அர்த்தம். அதிலே இருந்தே அவரு எப்படி ஆட்சி புரிகிறார் என்பது நல்லா விளங்குது! அப்படிப்பட்ட ஒருத்தரைப் பற்றி நான் தெரிஞ்சிக்கிறதுக்குக் கொஞ்சம் கூடத் தயாராக இல்லை.

இதைக்கேட்டதும் தருமருக்கு வெட்கமாகப் போய்விட்டது. தலை குனிந்தார். அங்கேயிருந்து கர்வமும் கீழே இறங்கி கொண்டது. இந்தக் கதை நமக்கு வழங்குகிற நீதி. தர்மம் கர்வத்திற்கு இடம் கொடுக்க கூடாது.


*தென்கச்சி கோ சுவாமிநாதன்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

967

## குடையும் நந்தினியும்!





அது ஒரு சிறுவர் குடை.

மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட குடை.

கண்ணைக் கவரும் கிளிப் பச்சை நிறத்தில் துணி விரிப்பு, பளபளப்பான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் முட்டுக் கம்பிகள், அழகான பூண் கொண்டை, கார்ட்டூன் சித்திரம் பொறித்த கைப்பிடி என அழகாக இருந்த அதை, நந்தினியின் பிறந்தநாள் பரிசாக அப்பா வாங்கினார்.

நந்தினி, தெற்றுப்பல் தெரிய சிரிக்கும் 10 வயது சிறுமி.

அப்பா வாங்கிவந்த அந்தக் குடை, அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

குடைக்கும் நந்தினியைப் பிடித்திருந்தது. அவளோடு 'ஒட்டிக்கொண்டது.

விற்பனைக்காகக் கடையில் இருந்தபோது, அதன் மூத்த சகா ஒன்று அடிக்கடி சொல்லும் வார்த்தைகள், குடையின் நினைவுக்கு வந்தது.

நம்மை யார் வைத்திருக்கிறார்களோ... அவரே நமது எஜமானன்.

நாம் அவருக்கு உண்மையாக நடந்துகொள்ள வேண்டும்!

இன்று முதல் இந்தச் சிறுமி எனது எஜமானி.

நான் இவளுக்கு உணமையாக இருப்பேன்' என்று நினைத்த குடைக்கு ஒரு சந்தேகம்.

தங்கள் கையில் கிடைத்த' பொருள்களை அக்குவேறு, ஆணிவேறாகப் . பிரித்துப் போடுவதில் சிறுவர்களுக்கு அலாதிப் பிரியம்.

நந்தினியும் தன்னைப் பிய்த்துவிடுவாளோ?

குடையின் நினைப்புக்கு முற்றிலும் மாறாக இருந்தாள் நந்தினி.

அவள் செய்யும் ஒவ்வொரு செயலிலும் ஒரு நளினம், அழகுணர்ச்சி இருந்தது.

குடையை மென்மையாகக் கையாண்டாள். முதலில், துணி மடிப்பின் பிணைப்பை விடுவிப்பாள்.

பின்னர், கைப்பிடிப் பொத்தானை மென்மையாக, போதிய விசையுடன் அழுத்துவாள்.

மலர்களின் இதழ்கள் மாதிரி குடை விரியும்.

குடையை மடக்குவதும் அப்படித்தான்.

நந்தினி வீட்டு முன்வாசலில் ஒரு வராண்டா உண்டு.

அதன் சுவற்றில், மடிக்கப்பட்ட நிலையில் குடை தொங்கும்.

ஒருநாளும் அலங்கோலமாகத் தொங்கியது இல்லை.

உடைமைகளை நேசிக்கும் சிறுமி, எனது எஜமானி' என்று நினைத்த குடைக்கு, ஆனந்தம்.

நந்தினிக்கு, ஒரு குடை வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆசை எப்படி வந்தது?' என்று குடைக்கு ஒரு கேள்வி தோன்றியது.

நந்தினியின் வகுப்பு ஆசிரியை, தினமும் பள்ளிக்குக் குடை பிடித்துக்கொண்டு வருவார். அணிந்திருக்கும் சேலைக்குப் பொருந்தும் விதத்தில் மூன்று, நான்கு குடைகள் அவரிடம் இருக்கும்.

அதைப் பார்த்துதான் நந்தினிக்கும் குடை ஆசை தோன்றியது.

நந்தினி, வீட்டு போர்ட்டிகோவில் தோழிகளோடு ஓடிப்பிடித்து, ஒளிந்து விளையாடுவாள்.

அம்மாவோடு கதை பேசுவாள்.

நிலாச் சோறு சாப்பிடுவாள்.

அவள் செய்யும் ஒவ்வொரு குறும்பையும் குடை ரசிக்கும்.

இப்படி இனிமையாக இருந்த போதுதான், அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

ஊரில் இருந்து நந்தினியின் பாட்டி வந்திருந்தார். நந்தினி, பாட்டியோடு கடை வீதிக்குப் போனாள்.

ஒரு கடையில் காய்கறி வாங்கும் போது, குடையை மறந்து வைத்துவிட்டுச் சென்றுவிட்டாள்.

(தொடரும்)

## 10.2014 31 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 475-ரோமுலஸ் ஆகுஸ்டலஸ் உரோமப் பேரராசன் ஆனான்.
- 1517-கிறிஸ்தவச் சீர்திருத்த இயக்கம்: மார்ட்டின் லூதர் தனது 95 கொள்கைகளை ஜேர்மனியின் விட்டன் பேர்க் தேவாலய வாசலில் வெளியிட்டார்.
- 1863 - நியூசிலாந்தில் நிலைகொண்ட பிரித்தானியப் படைகள் "வைக்காட்டொ" என்ற இடத்தில் தாக்குதலை நடத்தியதைத் தொடர்ந்து மவோரி போர்கள் மீண்டும் ஆரம்பமானது.
- 1864-நெவாடா ஐக்கிய அமெரிக்காவின் 36 ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1913 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது நெடுஞ்சாலை லிங்கன் நெடுஞ்சாலை திறக்கப்பட்டது.
- 1924 -உலக சேமிப்பு நாள் இத்தாலியின் மிலானோ நகரில் சேமிப்பு வங்கிகளின் உலக அமைப்பினால் அறிவிக்கப்பட்டது.
- 1931 - தமிழின் முதல் பேசும் படம் காளிதாஸ் வெளியானது.
- 1954 - அல்ஜீரியாவில் பிரெஞ்சு ஆக்கிரமிப்புக்கெதிராக அல்ஜீரிய தேசிய விடுதலை முன்னணி போராட்டத்தை ஆரம்பித்தது.
- 1961 - ஸ்டாலினின் உடல் மொஸ்கோவில் உள்ள லெனினின் நினைவகத்திலிருந்து அகற்றப்பட்டது.
- 1969 - வோல் மார்ட் தொடங்கப்பட்டது.
- 1973 -அயர்லாந்தில் டப்ளின் நகர சிறை ஒன்றிலிருந்து மூன்று ஐரியக் குடியரசு இராணுவத்தினர் அங்கு தரையிறங்கிய கடத்தப்பட்ட உலங்கு வானூர்தி ஒன்றில் தப்பி வெளியேறினர்.
- 2003 - 22 ஆண்டுகள் ஆட்சியின் பின்னர் மலேசியப் பிரதம மந்திரி மகதிர் பின் முகமது தமது பதவியைத துறந்தார்.

### பிறப்புகள

- 1795 - ஜோன் கீற்ஸ், ஆங்கிலக் கவிஞர் (இ. 1821)
- 1922 - நொரொடோம் சிஹானூக், கம்போடிய அரசர்
- 1930 - மைக்கேல் கொலின்ஸ், அமெரிக்க விண்வெளிவீரர
- 1933 - துரை இராஜாராம், தமிழக எழுத்தாளர்


### இறப்புகள்

- 1811 - பண்டார வன்னியன், வன்னி மன்னன்.
- 1975 - எஸ். டி. பர்மன், இந்திய இசையமைப்பாளர் (பி. 1906)
- 1984 - இந்திரா காந்தி, இந்தியப் பிரதம மந்திரி (பி. 1917).
- 1986 - றொபேர்ட் மலிக்கென், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (பி. 1896)
- 2003 - செம்மாங்குடி சீநிவாச ஐயர், இந்திய கர்நாடக இசைப் பாடகர் (பி. 1908)
- 2005 - அம்ரிதா பிரீதம், பஞ்சாபி எழுத்தாளர் (பி. 1919)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்





..மூன்றாவது போட்டி சென்னையில் ஆரம்பமானது. ரசிகர்களை ஏமாற்றாமல் சென்னை சிதம்பரம் மைதானத்தில் தனது இருபத்தி ஐந்தாவது சதத்தை அடித்து சச்சின் மகிழ்வித்தார். இந்த டெஸ்ட் போட்டியிலும் இந்தியா வெற்றிபெற்று தொடரை 2-1 என்ற கணக்கில் ஜெயித்தது.

டெஸ்ட் போட்டிகளைத் தொடர்ந்து ஐந்து ஒருநாள் போட்டிகள் தொடங்கின. பெங்களூரில் இந்தியா, பூனேவில் ஆஸ்திரேலியா, இந்தூரில் இந்தியா, விசாகப்பட்டணத்தில் ஆஸ்திரேலியா மற்றும் மார்கோவில் நடந்த இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்று ஒரு நாள் தொடரை 3-2 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்று டெஸ்ட் தொடர் தோல்விக்கு மருந்து தடவிக் கொண்டது.

இந்தூரில் நடைபெற்ற ஒருநாள் போட்டி சச்சின் கிரிக்கெட் வாழ்வில் புதிய சகாப்தத்தை உருவாக்கியது. இது சச்சினுக்கு 266 ஆவது ஒருநாள் போட்டி. இந்த மண்ணில் சச்சின் 28 ஆவது செஞ்சுரியை அடித்தார். அது மட்டுமா 10,000 ரன்கள் என்ற இமாலய எண்ணிக்கையையும் தாண்டினார்.

மார்கோவில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் மற்றொரு சாதனையையும் சச்சின் நிகழ்த்தினார். ஸ்டீவ்வா விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் 100 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற கிரீடத்தையும் சூட்டிக்கொண்டார். ஆக மொத்தம் இந்தத் தொடர் சச்சினுக்கு மறக்க முடியாத தொடர் எனில் அதில் வியப்பேதும் இல்லை. 10,000 ரன்கள் 100 விக்கெட்டுக்கள், நிஜமாகவே பிரம்மாண்ட சாதனைதான். ஹேட்ஸ் ஆஃப் சச்சின். ஆஸ்திரேலியாவை டெஸ்ட் போட்டிகளில் வீழ்த்தி வெற்றி பெற்ற களிப்புடன் இந்தியா ஜிம்பாப்வே கிளம்பியது. சச்சின் இந்தப் போட்டிகளில் எதிர்பார்த்த ரன்களை எடுக்கவில்லை. ஆக, டெஸ்ட் போட்டியில் ஜிம்பாப்வேயை வீழ்த்தலாம் என்று எண்ணிய இந்தியாவின் கனவை ஜிம்பாப்வே தகர்த்தது. அடுத்து இந்தியா, மேற்கு இந்தியத் தீவுகள் மற்றும் ஜிம்பாப்வே நாடுகளுக்கு இடையேயான முத்தரப்புப் போட்டிகளில் சச்சின் கணிசமான ரன்களைக்



> சென்னை சிதம்பரம் மைதானத்தில் தனது இருபத்தி ஐந்தாவது சதத்தை அடித்து சச்சின் மகிழ்வித்தார்.

### 10,000 ரன்கள் 100 விக்கெட்டுகள்!

குவித்தார். 122 ரன்களை அடித்ததுடன் மூன்று ஆட்டநாயகன் விருதுகளைக் குவித்தார். வாலு போச்சு கத்தி வந்தது என்ற பழமொழிக்கு ஏற்ப சச்சினுக்கு முதுகு வலி புறமுதுகிட்டு ஓட வேறு ஒரு ரூபத்தில் இன்னொரு வலி சச்சினுடன் சரசமாட கதவைத் தட்டியது என்று கூறியிருந்தோம். அந்த வலி கால் வலி. ஜிம்பாப்வே அணியுடனான போட்டியின்போது ஃபீல்டிங் செய்த சச்சின் அடிக்கடி ஓய்வறைக்குச் சென்று வந்தார். அப்போது அவருக்கு ஏதோ வயிற்றுக்கோளாறு என்று கூறப்பட்டது. பின்னர் ஹராரேயில் நடந்த மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியின் போது சச்சினுக்கு இருக்கும் உண்மையான பிரச்சினை தெரிய வந்தது. அங்கு நடந்த ஒருநாள் போட்டியில் சச்சின் தனது 29 ஆவது செஞ்சுரியை அடிக்க பந்தை அடித்துவிட்டு ஓடும் போது கால் விரலில் எதையோ வைத்து அழுத்துவது போன்ற கடுமையான வலி ஏற்பட்டது. இது குறித்து சச்சின் இந்தியா திரும்பியதும் தனது வீட்டில் செய்தியாளர்களுக்கு விளக்கினார். செஞ்சுரியை எட்ட பந்தை அடித்து விட்டு ஓடும்போது களுக்கென்று ஒரு சத்தம் கேட்டது. எதிரே நின்று கொண்டிருந்த ராகுல் ட்ராவிட்டிடம் எனது வலது கால் பெருவிரலைக் காட்டி கடுமையான வலி இருப்பதாகக் கூறினேன். அடுத்த நாள் வலைப் பயிற்சிக்குக் கூட சொல்லாமல் ஐஸ் கட்டியை வைத்து அழுத்தி வலியைக் குறைக்க முயன்றேன். ஃபிசியோதெரபிஸ்டிடம் வலி குறித்துக் கூறினேன். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தேன். எலும்பு நிபுணரையும் சந்தித்தேன். பிராக்சர் இல்லை என்று கூறிவிட்டார். இந்தியா வந்தவுடன் குடும்ப மருத்துவர் ஜோஷியை அணுகினேன். சிடிஸ்கேன் எடுத்ததில் மயிரிழை எலும்பு முறிவு இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டது. கிரிக்கெட் விளையாட்டிற்காக ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்ட ஸ்பைக் ஷுக்கள் அணிவதால் உடல் எடை விரல்களை அழுத்தும். ரன் எடுக்க ஓடும்போது இந்த அழுத்தம் பல மடங்கு அதிகரிப்பதால் விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கக் கூடும் என்று ஜோஷி தெரிவித்தார். வலி முற்றிலுமாகக் குறைய முழுமையான ஓய்வு எடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் ஆலோசனை கூறினர்.

**கே. ரமேஷ்**

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி


..அதுதான் உண்மையான வழிபாடு. கடவுளைக் கோவிலில் வழிபடுவது மிகச் சுலபம். உண்மையான வழிபாடென்பது எல்லாவற்றையும் கடவுளாகக் காண்பது; உங்கள் அண்டை வீட்டுக்காரரைக் கடவுளாகக் காண்பது.

மக்கள் எதையும் அதன்மூலம் வரை சென்று பார்ப்பதில்லை. அது

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

தான் பிரச்சினையே! அன்பே கடவுளின் மூலமாகும். கடவுளின் மூலம், எல்லாவற்றிலும் அவரைக் காண்பதில்தான் இருக்கிறது. மக்கள் மூலம் வரை செல்வதற்குப் பயப்படுகிறார்கள்; அதனால் அவர்கள் மேலோட்டமான அடுக்குகளிலேயே, தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள். அவர்களிடம், வாழ்க்கையில் எந்த விடயத்திலும் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தாண்டிச் சென்று ஆராய்ந்தறிவதற்கான தைரியம் இல்லை. அதனால்தான் அவர்கள் உங்களையும் ஆராய்ந்தறிய அனுமதிப்பதில்லை. அவர்கள் கண்டுபிடிப்பதே உண்மை என்று உங்களிடம் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதைப் பின்பற்றினாலே போதும் என்று சொல்கிறார்கள்.

உள்ளே ஆழ்ந்து செல்லவும் அன்பு செலுத்தவும் தைரியம் பெறுங்கள். நீங்கள் காணும் எல்லாவற்றிலும் இருக்கும் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் பொதுவான இழையை உணரத் தொடங்குவீர்கள். நீங்கள் காண்பது



எல்லாமே பிரபஞ்ச இருப்புத்தன்மை எனும் உண்மையான இழையால் ஒன்றாக சேர்க்கப்பட்ட மாய நிகழ்வுகள்தான் என்பதைப் புரிந்து கொள்வீர்கள். தானாகவே நீங்கள் எந்தவித கஷ்டமும் இன்றி எல்லாவற்றையும் ஒரே விதமாக நேசிக்கத் தொடங்குவீர்கள். ஏனெனில் நீங்கள் எல்லோரிடத்திலும் எல்லாவற்றிலும் பிரபஞ்ச இருப்புத் தன்மையை மட்டுமே காண்கிறீர்கள்.

ஆனால் உங்களிடம் இந்த உருமாற்றம் நிகழ நீங்கள் அனுமதித்தால் மட்டுமே இது நிகழும். உங்களிடம் ஏதேனும் மாற்றம் இருந்தால் அது விழிப்புணர்வில் ஏற்படும் மாற்றமே; வேறு எந்த மாற்றமும் இல்லை. நீங்கள் இந்தப் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் ஒரு பகுதிதான் என்பதை உணரச் செய்யும் ஒரே விடயம்தான் அன்பு மட்டுமே.

### ஆன்மீகம் 60


நீங்கள் வருடக்கணக்காக பிரபஞ்ச இருப்புத் தன்மை அல்லது கடவுளைப் பற்றி எந்த விதமான அனுபவம் இல்லாமலே பேசிக் கொண்டே இருக்கலாம். உங்களுக்கு கடவுளைப் பற்றி இவ்வளவு விடயங்கள் தெரிந்திருப்பதாக நீங்கள் நினைப்பதால் உங்கள் அஹங்காரமானது இனிமையாக திடமாகவும் இருக்கும்! ஆனால் நீங்கள் உள்ளே நோக்கினால் உறுதியான அனுபவம் எதுவும் இருக்காது. உறுதியான அனுபவம் எதுவும் இல்லாததனால் நீங்கள் வார்த்தைகளில் சிக்கிக் கொண்டு விடுகிறீர்கள்.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம்-2015




....கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தினை நான் சமர்ப்பிக்கின்ற 2015 ஆம் ஆண்டின் தலா வருமானம் 4,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இது 2005 இல் காணப்பட்ட நிலையினைவிட 4 மடங்கு அதிகமானதென்பதுடன் எமது எதிர்பார்க்கைகள் ஒரு வருடம் முந்தியதாகக் காணப்படுகின்றது.

பொருளாதாரமானது ஏறக்குறைய 8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.

ஏற்றுமதிகள், சுற்றுலா மற்றும் வெளிநாட்டு ஊழியர் பெறுகைகளிலிருந்து வருமானம் மக்களின் வருமான மூலங்களை அதிகரித்துள்ளதுடன் வியாபார சமுதாயத்தில் புதிய முதலீட்டு வாய்ப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இவை மொ.உ.உற்பத்தியில் ஏறக்குறைய 3 சதவீத பற்றாக் குறையுடைய குறைந்த வருமான கணக்கொன்றினை உருவாக்குவதற்கு எமது வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களை ஸ்திரப்படுத்தியுள்ளன.

சமாதானம் மற்றும் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டதுடன் உள்நாட்டு உற்பத்தியினை நாம் அதிகரித்துள்ளோம் என்ற வகையில் 9 வெளிநாட்டு ஒதுக்குகள் 10 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை அண்மித்துக் காணப்படுகின்றன.

2005 இல் காணப்பட்டதனை விட வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறையானது அரைவாசியினால் குறைவடைந்துள்ள அதேவேளை 2005 உடன் ஒப்பிடுகையில் பொதுப்படுகடன் மொ.உ.உற்பத்தியில் 30 சதவீதத்திற்கு குறைவாகக் காணப்படுகின்றது.

வர்த்தகம் மற்றும் சுற்றுலாக்களை கவரும் வகையிலும் இட அமைவின் விசேட தன்மையின் மூலம் கிடைக்கப் பெறும் நன்மையினையும்அடிப்படையாகக்கொண்டு நாட்டின் சர்வதேச துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை சர்வதேச தரத்தில் எமது அரசாங்கம் அபிவிருத்தி செய்துள்ளது.

அனைத்து பிரதான நகரங்கள் மற்றும் அபிவிருத்தி மையங்களை கைத்தொழில், விவசாய மற்றும் சுற்றுலா மையங்களுடனும் தகவல் தொழில்நுட்ப மற்றும் பல்கலைக்கழக நகரங்களுடனும் இணைக்கும் வகையில் அதிவேக பாதை வலையமைப்பினை மிகத் துரிதமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வடக்கிற்கான அதிவேகப் பாதை மற்றும் றுவன்புர அதிவேகப் பாதை அத்துடன் இரத்தினபுரிக்கான சமாந்தர புதிய புகையிரதப் பாதை என்பன 2017 இல் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நாட்டின்.தேசியப் பெருந்தெருக்கள் பெரும்பாலானவை அடுத்த தசாப்தத்திற்கு தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு முடியுமான வகையில் புதிய கொள்ளளவுடன் முழுமையாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன.

தலைமன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தை இணைக்கின்ற வடக்கு புகையிரதப் பாதை மீண்டும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாத்தறை புகையிரதப் பாதை தரமுயர்த்தப்பட்டுள்ளது. மாத்தறை - கதிர்காமம் புதிய புகையிரதப் பாதை நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருவதுடன் பெலியத்தை பிரிவு 2015 இன் இறுதியில் நிறைவு செய்யப்படவுள்ளது.

2005 மற்றும் 2015 ஆண்டுகளுக்கிடையில் மின் உற்பத்தி ஏறக்குறைய 5,000 மெகாவோட்டாக இரட்டிப்பாக அதிகரித்துள்ளதுடன் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தில் ஏறக்குறைய 300 மெகாவோட்டினை சேமிப்பதன் மூலம் மின் ஊடுகடத்தல் நட்டங்கள் 9 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளன.

மாற்று புதுப்பிக்கக் கூடிய சக்தி மூலங்களும் நாட்டில் ஏறக்குறைய 300 மெகாவோட் மின்சாரத்தினை உற்பத்தி செய்கின்றன.

குறைந்த செலவினத்தில் மின்சாரத்தினை உற்பத்தி செய்வதை நோக்கி எம்மால் படிப்படியாக பின்பற்றப்படும் உபாயங்களின் மூலம் எமது 4.5 மில்லியன் வீட்டுப் பாவனையாளர்கள் அனைவரும் நன்மை அடையும் வகையில் கடந்த செப்டெம்பர் மாதத்திலிருந்து மின்சார செலவினை 25 சதவீதத்தினால் குறைப்பதற்கு அரசாங்கத்தினால் முடியுமாக இருந்தது.

மொறகஹகந்தை, உமா ஓயா, தெதுறு ஓயா மற்றும் யான் ஓயா திசை திருப்பல் திட்டங்கள் வடக்கு, வடமேற்கு மற்றும் தென் மாகாணங்களிலுள்ள வரண்ட வலயங்களுக்கு 2016 ஆண்டளவில் நீர்ப்பாசனம் செய்வதற்கு முடியுமாக இருக்கும்.

வெஹெரகல றம்புக்கண் ஓயா நீர்த்தேக்கம் போன்ற பல்வேறு புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. புதிய பாதுகாப்புத் தரா தரங்களுடன் கூடிய பராக்கிரம சமுத்திரம், மின்னேரியா, கிரித்தலே, றிதியகம, தப்போவ, இங்கினிமிட்டிய போன்ற அனைத்து பிரதான நீர்த்தேக்கங்களும் புனரமைக்கப்பட்டுள்ளன.

வரட்சியினை பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. விவசாயம், மீன்பிடி, கால்நடை, மின் உற்பத்தி, உயிரியல் பல்வகைத்தன்மை என்பவற்றின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு 2005 இலிருந்து இத்துறையில் செய்யப்பட்டுள்ள முதலீடானது மிகவும் அதிகமானதாகும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, தற்பொழுது காணப்படும் மீன்பிடித் துறைமுகங்களின் வசதிகளை புனரமைத்தல், சிலாபத்துறை, குருநகர், கந்தறை, களமெட்டிய புதிய மீன்பிடித் துறைமுகங்களின் புனரமைப்பு நிறைவடைந்துள்ளதுடன் வென்னப்புவ, கப்பறத்தொட்ட, தொடந்துவ, ஹிக்கடுவ மற்றும் நீர்கொழும்பு வாவி என்பவற்றில் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரத் தளங்களின் அபிவிருத்தி இந்நாட்டில் அடிப்படையான மீன்பிடி வளங்களை விருத்தி செய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 4,374 பத்துநாள் படகுகள், 24,364 தினசரி படகுகள் மற்றும் 20,868 சாதாரண படகுகள் உள்ளடங்கலான மீன்பிடி படகுகள் பராமரிக்கப்பட்டுள்ளதுடன் இத்தொழிற் துறையில் ஈடுபட்டுள்ள 186,939 மீனவர்கள் பல்வேறுபட்ட அபிவிருத்தி உதவித் திட்டங்களின் மூலம் உதவியளிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்க முதலீட்டு உபாயத்தின் அடிப்படையில் காலி, கொழும்பு, பொலனறுவை, திருகோணமலை போன்ற நகரங்களில் அரசாங்கம் நீர் வழங்கல் முறைமைகளை நிறைவு செய்துள்ளதுடன் கம்பஹா, குருநாகல், புத்தளம், மாத்தளை, அநுராதபுரம், ஹம்பாந்தோட்டை, கண்டி, அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பிரதான நீர் வழங்கல் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

சமுதாய நீர் வழங்கல் திட்டங்கள் சிறிய நகரங்கள் மற்றும் கிராமியப் பிரதேசங்களில் புதிதாக உருவாக்கப்பட்ட சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது அரசாங்கம் மனித வளங்கள் அபிவிருத்திக்காக விசேட முக்கியத்துவத்தினை வழங்கியுள்ளது.

உயர் கற்கைகளுக்காக புதிய பாடங்களை வழங்குவதன் மூலம் ஒவ்வொரு பல்கலைக்கழகமும் விரிவாக்கலுக்கான புதிய வசதிகளை விருத்தி செய்துள்ள வகையில் பல்கலைக்கழக நகரமாக்கல் முன்னெடுப்பானது முன்னேற்றகரமாக மேற்கொள்ளப்படுகின்றது. பல்கலைக்கழக மாணவர்களின் தங்குமிட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு 25,000 இற்கு அதிகமானவர்களுக்கு விடுதி வசதி நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான சம்பளங்கள் மற்றும் ஆராய்ச்சி ஊக்குவிப்பு தொகைகள் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளன.

இளைஞர்களை இலக்காகக் கொண்ட திறன் விருத்திக்கான முன்னெடுப்புக்கள் கடந்த காலங்களில் முன்னேற்றகரமாக வளர்ச்சியடைந்து வரும் தொழிற்பயிற்சி கல்வியில் பிரதான விடயமாகும்.

புதிய வியாபார முகாமைத்துவ பாடசாலை ஒன்றின் நிர்மாணப் பணி மற்றும் மாலபையில் அமைந்துள்ள தொழில்நுட்ப நிர்வாகம், முல்லைத்தீவில் உயர் தொழில்நுட்ப நிறுவகம், தகவல் தொழில்நுட்ப பாடசாலைகளின் விரிவாக்கம், மாலபையில் அமையப் பெறும ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அத்துடன் தொழில்நுட்ப கல்வியினை முன்னேற்றுவதற்கான பல்வேறுபட்ட உயர் பல்கலைக்கழக கல்லூரிகளின் நிர்மாணப் பணிகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன.

மீன்பிடி மற்றும் சமுத்திர வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான கேள்வியுடைய ஆற்றல் விருத்தி கல்வியினை முன்னெடுப்பதற்காக சமுத்திரவியல் பல்கலைக்கழகமொன்றினை தாபிப்பதற்கான [illegible] [illegible]

ஒவ்வொரு வருடமும் பாடசாலைகளுக்கு அனுமதி பெறும் ஏறக்குறைய 350,000 சிறுவர்களை உள்வாங்கும் வகையிலான சிறுவர் நட்பு பாடசாலை அபிவிருத்தி முன்னெடுப்பொன்றினை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

6,500 இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் வசதிகள் தரமுயர்த்தப்பட்டுள்ளதுடன் ஏனைய அனைத்து ஆரம்பப் பாடசாலைகளும் சிறுவர் நட்பு பாடசாலை சூழல், துப்பரவேற்பாட்டு வசதிகள் மற்றும் ஆசிரியர் வசதிகள் உள்ளடங்கலாக முன்னேற்றமடையச் செய்யப்பட்டு வருகின்றன. அனைத்து பாடசாலை செல்லும் சிறுவர்களது ஆங்கிலம், கணிதம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதிலுமுள்ள 1,000 பாடசாலைகளில் புதிய மஹிந்தோதய ஆய்வு கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

தூரப் பாடசாலைகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு குறிப்பீடு செய்யப்பட்ட பாடசாலை ஆட்சேர்ப்பு முறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், கற்பித்தல் சாதனங்கள், பரீட்சைகளின் தராதரம் மற்றும வெளிக்கள செயற்பாடுகள் என்பன சிறுவர்களின் நன்மைக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த முன்னெடுப்புகளின் காரணமாக ஹம்பாந்தோட்டை, கிளிநொச்சி, மட்டக்களப்பு, பொலனறுவை, பதுளை போன்ற தூர பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலை மாணவர்களின் சாதாரண தரப் பரீட்சை சித்தியடைதல் விகிதம் 2005 இல் காணப்பட்ட 46.6 சதவீதத்திலிருந்து தற்பொழுது 62.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. இவ்வருடம் இடம் பெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் முதல் 10 சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களில் 9 பேர் இந்நாட்டிலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் காணப்படும் ஆரம்ப பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் என்பது எம் அனைவருக்கும் பெருமை தரும் விடயமாக இருப்பதானது. கிராமப் பிரதேசங்களில் கல்வித் துறை மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதாக அமைந்தது.

அறநெறிக் கல்வியினைப் பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு கடந்த வரவு செலவுத்திட்டத்தில் பிரிவெனா கல்வி மற்றும் அறநெறிப் பாடசாலைக் கல்வி என்பவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, கிராமியப் பிரதேசங்களில் 900 நனசெல நிலையங்களையும் பெருந்தோட்டப் பிரதேசங்களில் 26 பிரஜாசக்தி தொழில்நுட்ப நிலையங்களையும் உருவாக்கியதன் மூலம் கிராமிய மட்டத்தில் தகவல் தொழில்நுட்ப கல்வியினை ஊக்குவிப்பதற்காக சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவு மிகவும் ஊக்கத்தினை நாம் பெற்றுள்ளோம்.

இது 2005 இல் கவனிப்பாரற்று இருந்த தகவல் தொழில்நுட்ப அறிவு விகிதம் தற்பொழுது 45 சதவீதமாக அதிகரிக்குமளவு பங்களிப்புச் செய்தது.

இலத்திரனியல் நூலக நனசெல முன்னெடுப்பு வெற்றியளித்துள்ளதை உறுதிப்படுத்தும் வகையில் 140 இற்கு அதிகமான உலகளாவிய விண்ண்ப்பங்களில் உலகில் மிகவும் பிரபல்யமான மிலிந்த மற்றும் பில்கேட்ஸ் நிறுவன விருது இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

உணவு தொழில்நுட்பம், தொற்றாத நோய்கள், குறைந்த செலவின நிர்மாண தொழில்நுட்பம், புதுப்பிக்கக் கூடிய சக்தி, சுதேச மருத்துவத்துறை போன்ற துறைகளில் எமது விஞ்ஞானிகளினால் முனனெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகள் ஊக்குவிக்கத்தக்களவு காணப்படுகின்றன.

நனோ தொழில்நுட்ப முன்னெடுப்புகளில் தனியார் - அரசாங்க பங்குடமையானது உயர்தர விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்கை நதியை தூய்மைப்படுத்தும் திட்டம்; உச்சநீதிமன்றம் கேள்விக்கணை தொடுப்பு

கங்கை நதியை மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்க பசுமை தீர்ப்பாயத்திற்கு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

அந்தத் தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் மற்றும் மின்சாரம் துண்டிக்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட நடவடிக்கைகளை உச்ச நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

மேலும் மத்திய அரசும், மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் தவறு செய்யும் தொழிற்சாலைகளை தண்டிக்காமல் இருப்பதையும் சுட்டிக் காட்டி உச்ச நீதிமன்றம் கண்டித்துள்ளது.

பணபலமும் அரசியல் செல்வாக்கும் மிகுந்த அத்தகைய தொழிற்சாலைகள் மீது மாசுகட்டுப்பாட்டு வாரியம் நடவடிக்கை எடுக்காதது ஏனென்று கடுமையாக கேள்வி எழுப்பியுள்ளது.

கங்கை நதியின் தற்போதைய மாசு அளவை கருத்தில் கொண்ட நீதிமன்றம், மாசுபடுத்தும் தொழிற்சாலைகளை உடனடியாக மூட ஏன் உத்தரவிடக்கூடாது என்று கேள்வி எழுப்பியுள்ளது.

மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் நடவடிக்கை எடுக்கத் தவறியதால், பசுமைத் தீர்ப்பாயம் தான் நடவடிக்கை எடுக்க முனைப்பு காட்ட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து உச்சநீதிமன்ற நீதிபதிகள் தாக்கூர், கே.கோயல், ஆர்.பானுமதி ஆகியோர் கூறும்போது,

' இது நிறுவனம் சார்ந்த தோல்வி, உங்கள் கதை தோல்வியின், வெறுப்பின், சீரழிவின் கதை. மாசுபடுத்தும் தொழிற்சாலைகளுக்கு எதிராக நீங்கள் செயற்பட்டிருக்க வேண்டும். கங்கையை தூய்மைப்படுத்தும் பணியை உங்களிடத்தில் ஒப்படைத்தால் இன்னும் 50 ஆண்டுகள் ஆகும்.

இது குறித்து நீதிமன்றத்தின் தலையீடும், அதன் நீடித்த முயற்சிகளும் எந்த விதப் பலனையும் அளிக்கவில்லை என்பதைக் கூறுவதற்கு நாங்கள் வருந்துகிறோம்.

எனவே கங்கை நதியின் தூய்மையைக் காப்பது எங்கள் கடமை. கங்கை நதி மக்களின மதம் மற்றும் ஆன்மீக உணர்வின் முக்கியத்துவம் மட்டுமல்ல அது மக்களின் வாழ்வாதாரம் என்று கூறிக் கொண்டேயிருப்பதில் எந்தவித பயனும் இல்லை என்று வேதனையுடன் கூறியுள்ளனர்.

மேலும், பசுமைத் தீர்ப்பாயம் நதியின் நிலவரம் குறித்தும், மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் மீதான நடவடிக்கைகள் குறித்தும் 6 மாதத்திற்கு ஒரு முறை அறிக்கைத் தாக்கல் செய்ய வேண்டுமெனவும் உத்தரவிட்டு அடுத்த விசாரணையை டிசெம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு தள்ளி வைத்தனர். (இ-5)

# ம.தி.மு.கவுடன் கூட்டணி அமைந்தால் மகிழ்ச்சியே!

## கருணாநிதி தெரிவிப்பு

ம.தி.மு.கவுடன் கூட்டணி அமைந்தால் மகிழ்ச்சியாக வரவேற்பேன் என தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நேற்று காலை, சென்னை கோபாலபுரம் இல்லத்தில் கருணாநிதி செயதியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கருணாநிதி கூறியதாவது, "வைகோ எனது எதிரி அல்ல நீண்ட கால நண்பர். ம.தி.மு.கவுடன் கூட்டணி ஏற்பட்டால் அதை வரவேற்பேன். கூட்டணி அமைந்தால் மகிழ்ச்சியே. கூட்டணிக்கு பா.ம.க.வர விரும்பினால், அது குறித்து தி.மு.க. பொதுக குழுவில் முடிவு எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பா.ம.க.நிறுவனர் ராமதாஸ் இல்ல திருமண விழாவில் தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

பா.ம.க. தலைவரின் முன்னிலையில் மு.க.ஸ்டாலின், வைகோ சந்தித்துப் பேசிக் கொண்டது அரசியல் வட்டாரத்தில் புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 2016 ஆம் ஆண்டு தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய புதிய கூட்டணி உருவாகக் கூடும் என்ற யூகங்களை இந்த சந்திப்பு ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் சந்திப்பு குறித்து மு.க.ஸ்டாலினிடம் செய்தியாளர்கள் கேட்ட போது, "வைகோவுடன் நடந்த சந்திப்பு நட்பு ரீதியானது" என்றார். "இதனை புதிய கூட்டணிக்கான சந்திப்பாக எடுத்துக் கொள்ளலாமா?" என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, "உங்கள் விருப்பம் அதுதான் என்றால், அதில் எனக்கும் மகிழ்ச்சியே" என்று தெரிவித்தார்.

"கூட்டணி ஏற்பட்டால் மகிழ்ச்சியே" என்று ஸ்டாலின் கூறியது பற்றி வைகோவின் கருத்தை கேட்ட போது, "ஸ்டாலின் அவ்வாறு விரும்பினால் அதில் எனக்கும் மகிழ்ச்சியே" என்று தெரிவிததார்.

இந்நிலையில், வைகோ, ஸ்டாலின்கருத்துகளை மேலும் உறுதிப்படுத்துவதுபோல் ம.தி.மு.க. - தி.மு.க. கூட்டணி அமைந்தால் மகிழ்ச்சியே என தி.மு.க. தலைவர் கருணா நிதியும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பேஸ்புக்கில் ஐ.லவ்.யூ. போட்ட சட்டக்கல்லூரி மாணவன் கைது

ஆந்திராவை கடந்த 12 ஆம் திகதி தாக்கிய ஹூட் ஹூட் புயல் குறித்து சர்ச்சையான கருத்து தெரிவித்த சட்டக் கல்லூரி மாணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்புயலின் கோர பிடியில் விசாகப்பட்டினம் சிக்கி உருக்குலைந்த நிலையில், குண்டூர் மாவட்டத்தில் உள்ள அருண் டால் பெட்டைச் சேர்ந்த சகந்தி ராகுல் ரெட்டி என்னும் நபர் தனது பேஸ்புக் பக்கத்தில், "ஐ.லவ். யூ. ஹூட் ஹூட், இயற்கை குறிப்பாக ஏமாற்றியவர்களை தண்டித்ததற்காக. கடவுள் இருக்கிறார் என்பதை உணர முடிகின்றது' என பதிவு செய்திருக்கிறார். ஆந்திர மாநில குற்றப் புலனாய்வுத் துறை பேஸ்புக்கில் பொறுப்பற்ற முறையில மக்களுக்கு எதிரான கருத்து தெரிவித்ததற்காக ராகுல் ரெட்டியை கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (இ-5)

# சபரிமலைக்கு தரிசனம் செய்ய வரும் பிரதமர் மோடிக்கு கொலை மிரட்டல்



## பா.ஜனதா அலுவலகத்திற்கு கடிதம் வந்தது

சபரிமலைக்கு தரிசனம் செய்ய வரும் பிரதமர் நரேந்திர மோடிக்கு கொலை மிரட்டல் விடுத்து பா.ஜனதா அலுவலகத்திற்கு மிரட்டல் கடிதம் வந்துள்ளது.

### மிரட்டல் கடிதம்

கேரள மாநில பா.ஜனதா கட்சி தலைமை அலுவலகம் திருவனந்தபுரத்தில் உள்ளது. இங்கு கட்சியின் முக்கிய தலைவர்களுள்ஒருவரான வி.வி.ராஜேசுக்கு ஒரு கடிதம் வந்தது.

அதில் இங்கிலாந்தை சேர்ந்த டேவிட் ஹெயன்சை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள கொல்லும் காட்சி போன்ற புகைப்படத்தையும், அதில் டேவிட் இருக்கும் இடத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் புகைப்படத்தையும் ஒட்டி அனுப்பப்பட்டு இருந்தது.

அத்துடன் சபரிமலை தரிசனத்திற்காக கேரளா வரும் நரேந்திர மோடியின் தலையை வெட்டுவோம் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

### விசாரணை

இது குறித்து சைபர் கிரைம் பொலிஸின் உதவியுடன் கடிதம் அனுப்பியவரை கண்டு பிடிப்பதற்கான முயற்சியில் கேரள பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் கொலை மிரட்டல் கடிதத்திற்கும் எங்களுக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்று சோசியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆப் இந்தியா அமைப்பின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

மாணார் பகுதியில் தற்போது அமைதியான சூழ் நிலை நிலவி வருகிறது. அதை சீர்குலைக்கும் வகையில் சில விஷமிகள் இது போன்ற செயல்களில் ஈடுபட்டு இருப்பதாக மாணார் எஸ்.டி.பி.ஐ. கிளை கமிட்டி தலைவர் பிரோஸ், செயலாளர் அனீஸ் நாதன் பரம்பில் ஆகியோர் தெரிவித்துள்ளனர். (இ-5)

## அவதூறு வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதித்த நீதிமன்றம்

பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமிக்கு எதிராக சென்னை நீதிமன்றில் 5 அவதூறு வழக்குகள் தொடரப்பட்டு இருந்தன. இந்த வழக்கில் சுப்பிரமணியன் சுவாமி நேரில் ஆஜராக வேண்டும் என்று அழைப்பாணை அனுப்பப்பட்டு இருந்தது.

இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் சுப்பிரமணியன் சுவாமி சார்பில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், அவதூறு வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடைவிதித்து உத்தரவிட்டது. மேலும் இது தொடர்பாக ஆறுவாரத்திற்குள் மத்திய மாநில அரசுகள் பதிலளிக்க வேண்டும் என்று உச்ச நீதி மன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. (இ-5)

பாரதச் செய்தி

## பொருளாதாரக் கூட்டமைப்பில் இந்தியா மீண்டும் தேர்வானது

ஐக்கிய நாடுகள் அவையின் சமூக மற்றும் பொருளாதார கூட்டமைப்பில் ஆசிய-பசுபிக் நாடுகளிலேயே அதிக வாக்குகளை பெற்று இந்தியா மீண்டும் தேர்வாகியுள்ளது.

ஐ.நா.பொருளாதார கவுன்சிலில் வரும் 2015 முதல் 3 ஆண்டுகளுக்கு உறுப்பினராக இருக்க 18 நாடுகள் நேற்று முன்தினம் தேர்வு செய்யப்பட்டன. ஐ.நா. அவையில் மொத்தம் 193 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. ஐ.நா. பொருளாதார கவுன்சிலில் இந்தியாவின் உறுப்பினர் பதவிக்காலம் இந்த ஆண்டுடன் முடிவடைகிறது.

இந்நிலையில், 3 இடங்களுக்கான தேர்தலில் போட்டியிட்ட இந்தியா ஆசிய பசுபிக் நாடுகளிலேயே அதிகமாக 183 வாக்குகளை பெற்று மீண்டும் தேர்வாகியுள்ளது. ஜப்பான், பாகிஸ்தான் நாடுகள் 181 வாக்குகளை பெற்றன.

இந்த தேர்தலில் வெற்றி பெற 124 இடங்களை வென்று 3 இல் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற வேண்டும். தேர்வு செய்யப்பட்ட 18 நாடுகளில் ஆஸ்திரியா, புர்கினா பாஸோ, பிரான்ஸ், ஜேர்மனி, கிரீஸ், இந்தியா, ஜப்பான், போர்த்துக்கலும அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஐ.எஸ்.ஐ.எஸ்ஸில் இணைய விரும்பிய தமிழக இளைஞன் ஐதராபாத்தில் கைது

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் இணைய முற்பட்ட தமிழகத்தை சேர்ந்த இளைஞர் உளவுத்துறை அதிகாரிகளால் ஐதராபாதில் கைது செய்யப்பட்டார்.

தொழில்நுட்ப வல்லுநரான முனாவாத்சல்மான் (வயது 30) என்ற தமிழகத்தை சேர்ந்த இளைஞர் ஐதராபாத்தில் உள்ள கூகுள் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் தனது பணியிலிருந்து விடுபட்ட அவர், சென்னையில் தங்கியிருந் தார். இந்த நிலையில் புதிய வேலையில் சேர்வதாக கூறி சென்னையிலிருந்து ஐதராபாத் புறப்பட்டு சென்ற வேளை உளவுத் துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

அவரிடம் நடத்தப் பட்ட விசாரணையில் அவர் ஐதராபாத்திலிருந்து அரபு நாடுகளுக்கு சென்று அங்கிருந்து ஈராக் நாட்டுக்கு செல்வதற்காக தயார் செய்யப்பட்ட விசா பறிமுதல் செய்யப்பட்டது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கடந்த 6 மாதங்களாக இணையத்தில் விபரங்களை சேகரித்தது. அது தொடர்பான விடயங்களில் சமூக வலைத்தளங்களில் ஆர்வம் செலுத்தி வந்ததை அடுத்து சல்மானின் நடவடிக்கைகள் உளவுத்துறை அதிகாரிகளுக்கு சந்தேகம் எழுப்புவதாக அமைந்தது. இதனை அடுத்து தொடர்ந்து அவர் கண்காணிக்கப்பட்டு வந்த நிலையில், ஐதராபாத்திலிருந்து அரேபியா செல்ல முயன்றபோது சல்மான் உளவுத்துறை அதிகாரிகளால் கைது செய்யப பட்டார்.

தொடர்ந்து அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் சல்மானின் நடவடிக்கைகள் அனைத்தும் நல்ல முறையில இருந்ததை அடுத்து, அவரது பெற்றோர்கள் மற்றும் நண்பர்களை கொண்டு சல்மானுக்கு அறிவுரை வழங்கப்பட்டதாகவும் அதன் பின்னர் அவரிடத்தில் தற்போது மனமாற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், முனாவாத் சல்மானின் மீது வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை என்று கூறியுள்ள அதிகாரிகள், அவர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு குறித்து வலைத்தளங்களின் வழியே ஏற்பட்ட ஈர்ப்பினால் அதில் இணைய முயற்சித்ததாகவும், அவருக்கும் அந்த இயக்கத்துக்கும் நேரடி தொடர்பு எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது."

இதேபோல கடந்த 22 ஆம் திகதி சிமி பயங்கரவாத இயக்கத்தால் ஒருங்கிணைக்கப்பட்டு இந்திய முஜாகுதீன் அமைப்பில் சேர முயற்சித்த ஐதராபாத்தை சேர்ந்த இளைஞர்கள் சிலர் ஆப்கான் புறப்பட இருந்த நிலையில் உளவுத்துறையால் கைது செய்யப பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கால்நடைகளின் திருட்டு அதிகரிப்பு

(மல்லாவி)

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் அண்மைகாலங்களில் வழங்கப்பட்ட கால்நடைகள் களவாடப்படும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதாக பாதிக்கப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலும் மாங்குளம், ஒலுமடு ஆகிய கிராமங்களில் வசிக்கும் வன்னி இறுதி யுத்தத்தின் போது குடும்பத்தலைவர்களை இழந்த பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கும் மற்றும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் வழங்கப்பட்ட ஆடுகள், கறவை பசுக்களை களவாடுவது அதிகரித்துள்ளது.

இவற்றை உரிமையாளர்கள் மேய்ச்சலுக்காக கட்டி விடுகின்ற போதுதிருடர்கள்கால்நடைகளை கட்டியிருந்த கயிறுகளை அறுத்து அவற்றை காடுகளினுள் விரட்டி விடுகின்றனர்.

பின்னர்அவற்றைப்பிடித்துஇறைச்சியாக்கிதூரபிரதேசங்களுக்குகொண்டு சென்று விற்பனை செய்கின்றனர்.

இதனால் பல குடும்பங்கள் தமக்கென வழங்கப்பட்ட பெறுமதியான கறவைப் பசுக்களை இழந்து பரிதவிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாரும் பலரை கைது செய்துள்ள நிலையில் தொடர்ந்து இத் திருட்டுச் சம்பவம் இடம்பெறுவதால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வேதனை அடைந்துள்ளன. எனவே அனைத்து தரப்பினரும் இவ்விடயத்தில்கவனமெடுத்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-15)


## கருத்தரங்கு

இலங்கைப் பொறியியலாளர் நிறுவனம், வடபிராந்தியம், யாழ் முகாமையாளர் சம்மேளனம் (JMF) யாழ். விஞ்ஞான சங்கம் ஆகியன ஒன்றிணைந்து அனைவருக்கும் நீர் 2015-2030 என்ற ஐக்கிய நாடுகளின் நிலைத்தகு அபிவிருத்தி இலக்கும் நீர்வளத்திறன் அபிவிருத்திக்கான தேசிய மூலோபாயத்தின் தேவையும் அது பற்றிய கருத்தரங்கு ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது. இக் கருத்தரங்கானது எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு குடிசார் பொறியியல் பிரிவு, யாழ்.பல்கலைக்கழகம் அறிவியல்நகர், கிளிநொச்சியில்நடைபெறும்.

இக்கருத்தரங்கின் வளவாளராக பேராதனை பல்கலைக்கழக விவசாய பொறியியல் பிரிவு சிரேஷ்ட பேராசிரியர் நிமால் குணவர்த்தன கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார். இதில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் கேட் டுள்ளார். (அ-2)

# நகரசபையின் மைதான கொட்டகை கடும் சேதம்

## மழைக்குக்கூட ஒதுங்க முடியாத நிலை



(குருமன்காடு)

வவுனியா நகரசபையின்மைதான கொட்டகை மழைக்குக் கூட ஒதுங்க முடியாதவாறு அங்குள்ள வாகன தரிப்பிடக் கொட்டகை துர்நாற்றம் வீசுவதுடன் மழை ஒழுக்காகவும் உள்ளது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா நகர சபையின் பிரதான வாயிலுக்கு அருகில் நகர சபை மற்றும் மைதானம் என்பவற்றுக்கு வருகின்ற பொதுமக்கள், விளை யாட்டு வீரர்கள் தங்களுடைய துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் என்பவற்றை நிறுத்துவதற்கு என கொட டகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அக்கொட்டகையின் மேற் கூரைப் பகுதி பிரிந்துள்ளதால் அக் கொட்டகைக்குள் மழைக்குக் கூட போய் நிம்மதியாக ஒதுங்கிக் கொள்ள முடியாது இருப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

இது தவிர, கொட் டகையின் அருகில் உள்ள வளவுக்குள் நகரசபையால் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகள் அடைக்கப்படுவதால் அவற்றின் கழிவுகளும் மழை நீருடன் சேர்ந்து கொட்டகைக்குள் வந்து தேங்குவதுடன் கொட்டகையும் கடந்த பல நாட் களாக வைக்கோல், பியர் ரின், போத்தல் போன்ற கழிவுகளுடன் காணப்படுகின்றது. இதனால கொட்டகைக்குள் மழை நேரங்களில் துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (அ-250)




## பாம்பு தீண்டிய சிறுமி வைத்தியசாலையில்

(தர்மபுரம்)

பாம்பு தீண்டிய நிலையில் சிறுமியொருவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சுண்டிக்குளம் விசுவமடுவில் வசித்து வரும் இரத்தினராசா சுஜி (வயது4) என்ற சிறுமியே நேற்று முன்தினம் அதிகாலை பாம்பு தீண்டிய நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது,

வீட்டில் நித்திரையில் இருந்த குறித்த சிறுமியை பாம்பு தீண்டியதில் அவர் மயக்கமுற்றார்.

இதனையடுத்து மயக்கமடைந்த சிறுமியை பெற்றோர் தர்மபுரம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதித்தனர். அதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவருகின்றார். (அ-2-282)

# மோ.சைக்கிள் வழங்குவதில் முறைகேடுகள் உள்ளன

## பாதிக்கப்பட்டோர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்கள ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் வழங்கலில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக வாழ்வின் எழுச்சி திணைக்கள உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வாழ்வின் எழுச்சி திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது. கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிற்குள் 76 வாழ்வின் எழுச்சி திட்ட உத்தியோகத்தர்கள் உள்ளனர். அவர்களில் 14 பேருக்கு மட்டுமே மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதிலும் துவிச்சக்கர வண்டிகளில் வருவோருக்கு மோட்டார் சைக்கிள்கள் கிடைக்கவில்லை என்றும், மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்களுக்கே மீண்டும் மோட்டார் சைக்கிள் கிடைத்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஏனைய உத்தியோகத்தர்களில் அநேகமான ஆண் உத்தியோகத்தர்கள் 50 ஆயிரம் ரூபாவும் பெண் உத்தியோகத்தர்கள் 45 ஆயிரம் ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு செலுத்தி இருப்பதாகவும் தெரியவருகின்றது.

இவர்களில் அநேகர் மோட்டார் சைக்கிள் எடுப்பதற்கான பணத்தை வங்கிகளில் கடன் பெற்றே செலுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே தமக்கான மோட்டார் சைக்கிள் விரைவில் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-272)

# மழைநீர் சேகரிக்கும் தொட்டிகள் அமைப்பு

## மன்னார், வவுனியா மாவட்டங்களில்

(மல்லாவி)

வரட்சி காலங்களில் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு மழைநீர் சேகரிக்கும் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கை மழைநீர் சேகரிக்கும் ஒன்றியமும் யு.எஸ்.எயிட் நிறுவனமும் இணைந்து மன்னார், வவு னியா ஆகிய மாவட்டங்களில் இந்த மழைநீர் சேகரிக்கும் தொட்டிகளை அமைத்துள்ளனர்.

இது தொடர்பில்தெரியவருவதாவது,

மேற்படி நிறுவனங்களின் 2 கோடியே 52 இலட்சம் ரூபா நிதியனுசரணையுடன் 36 மழைநீர் சேகரிக்கும் தொட்டிகள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன.

இவை ஒவ்வொன்றும் 7 இலட்சம் ரூபா பெறுமதியில் கட்டப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்திற்கு 16 மழைநீர் சேகரிக்கும் தொட்டிகளும் வவுனியா மாவட்டத்திற்கு 20 மழைநீர் சேகரிக்கும் தொட்டிகளுமாக மொத்தம் 36 தொட்டிகள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன.

இத்தொட்டிகள் ஒவ்வொன்றிலும் 30 ஆயிரம் லீற்றர் தூய மழை நீரை சேகரித்து கொள்ளமுடியும்.

இதன் மூலம் வரட்சி காலங்களில் பொதுமக்கள் தமக்கான குடிநீரை இத் தொட்டிகளில் இருந்து ஓரளவு பெற்று பூர்த்தி செய்து கொள்ள முடியும் என இலங்கை மழைநீர் சேகரிக்கும் ஒன்றியத்தின் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார். (அ-2-15)

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

(முக்கொம்பன்)

கிளிநொச்சி கணகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 2014 ஆம் ஆண்டு புலமைப்பரி சில் பரீட்சையில் சிவலிங்கம் விபுசன் என்ற மாணவன் 163 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார். (அ-283)

# கைகழுவுதல் விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுப்பு



(குருமன்காடு)

சர்வதேச கைகழுவுதல் தினம் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் எற்படுத்தும் முகமாக நேற்று முன்தினம் கணேசபுரம் சண்முகானந்த வித்தியாலயத்திலும் பெரிய தம்பனை மகா வித்தியாலயத்திலும் விழிப்புணர்வு செயற்றிட்டம் செயலாளர் ஜனார்த்தன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இவ் விழிப்புணர்வு செயற்றிட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கை கழுவுதலின் முக்கியத்துவத்தையும், கை கழுவாமல் விட்டால் ஏற்படும் நோய்கள் பற்றியும், தடுப்பு முறைகள் பற்றியும், இலங்கையில் தற்போது காணப்படும் சுகாதாரம் சார்ந்த சவால்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கபட்டன.

பாடசாலைகளில் சாப்பிடுவதற்கு முன்னரும் பின்னரும் மாணவர்கள் கைகழுவ வேண்டும் என்ற சிந்தனையை வளர்க்கும் முகமாக ஒரு தொகை சவர்க்காரங்கள் அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன. (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழரை கொன்று குவித்தவர்களுடன் கூட்டுச் சேர்ந்த கூட்டாளிகளை எதிர்த்தோம்

'கத்தி' படத்துக்கு எதிராக கதகளி ஆடியதில் முக்கியமானவர் தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் த.வேல்முருகன். ஆட்டம் முடிந்து




படம் திரைக்கு வந்து விட்டாலும் வேல்முருகனை சுற்றி கிளம்பியிருக்கும் சர்ச்சைகள் ஏராளம். சர்ச்சைகளுக்கும், சந்தேகங்களுக்கும் விடைதேட வேல் முருகனைச் சந்தித்தோம.

**லைக்கா நிறுவன அதிபரும் இலங்கைத் தமிழர் என்கிறார்களே... ஒரு தமிழர் தயாரித்த படத்தை எதிர்ததது ஏன்?**

பச்சைத்தமிழன் பாரிவேந்தர் தயாரித்த படம் புலிப்பார்வை. அவர், பல கல்வி நிறுவனாங்களை நடத்துகிறார். அரசியல் கட்சி வைத்துள்ளார். பெரிய செல்வந்தர். புலிப்பார்வை' படத்தின் இயக்குநர் பிரவீன் காந்த், நடிகர், நடிகைகள், டெக்னீஷியன்கள் எல்லாம் தமிழர்கள்தான். புலிப் பார்வை' படத்தின் கதை, காட்சி அமைப்புகள், புலி கள் இயக்கத்தை, ஈழத்தமிழர்களின் வீரம் செறிந்த போராட்டத்தை கொச்சைப்ப டுத்துவதுபோல இருந்தது. அதனால், எதிர்ப்பு தெரிவித்தோம். 65 சதவிகித காட்சிகளை மாற்றி அமைத்து வருகிறார்கள். தீபாவளிக்கு அந்தப் படம் வெளிவரவில்லை. உள்நாட்டுத் தமிழர் என்றாலும் கொள்கையை விட்டுக் கொடுத்து நாங்கள் சமரசம் செய்து கொள்ளவில்லை.

லைக்கா நிறுவனத்தின் சுபாஷ்கரன், ஈழத்தமிழராக இருந்தாலும் அவர், தமிழர்களை ஈவு இரக்கம் இல்லாமல் கொன்று குவித்த இலங்கை அரசின் கைக்கூலி. இலங்கையின் வர்த்தகக் கூட்டாளி. லைக்கா நிறுவனம்தான், தமிழக அரசு மிகக் கடுமையாக எதிர்த்த கொழும்பு கொமன் வெல்த் மாநாட்டின் கோல்டன் ஸ்பான்சராக இருநதது. இலங்கைக்கு பொருளாதாரத்தை ஈட்டும் மாநாட்டையும் நடத்தியது. சர்வதேச அரங்கில் இலங்கை அரசு போர்க்குற்றத்தை மறைக்க செய்யும் தகிடு தத்தங்களுக்கு சுபாஷ்கரனின் லைக்கா நிறுவனம் உடந்தையாக இருந்து உள்ளடி வேலைகளைச் செய்து வருகிறது. ஈழத்தமிழர்கள் வாழ்வில் விடியல் ஏற்படும் வரை இலங்கையோடு ஒட்டும் வேண்டாம், உறவும் வேண்டாம் என்பது தான் தமிழக அரசின் நிலைப்பாடு. அந்த வகை யில் தான், ஈழத்தமிழர் போர் வையில் தமிழ் திரை உல கில் இலங்கை அரசு கால் பதிப்பதை எதிர்த்திருக்கி றோம். லைக்கா நிறுவன த்தை கத்தி' படக்குழுவில் இருந்து வெளியேற்றும் காரி யத்தை வெற்றிகரமாக செயது முடித்தோம் என்று நெஞ்சை நிமிர்த்தி சொல்வதில் பெருமைப்படுகிறோம்.

**லைக்கா பெயரை நீக்கியதால் எல்லாம் சரியாகிவிட்டதா?**

திரைத்துறை, ஒட்டுமொத்த சமூகத்தின் பார்வையையும் ஒரு நொடியில் தன்பக்கம் சுண்டி இழுக்கும் வசீகர ஆற்றல் கொண்டது. அந்த ஆயுதம் நல்லவரகள் கையில் இருக்க வேணடும். திரையுலகம் நல் வழியில் செல்ல வேண்டும். வியாபார நோக்கம் இருந்தாலும் சமூக அக்க றையோடு அவர்கள் செயற்பட வேண்டும் என்றுதான், எங்களின் நியாயமான கோரிக்கையை முன்வைத்தோம். அதை திரைத் துறையினர் இப்போது புரிந்து கொண்டு விட்டனர். எவ்வளவு பணம் வைத்திருந்தாலும் தமிழ் இனத்துக்குத் துரோகம் செய்தவர்களுக்கு தமிழகத்தில் இடமில்லை என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறோம். கோடி கோடியாக

## தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் த.வேல்முருகன்

பணத்தைக் கொட்டுகிறார்கள என்று லைக்கா போனற தயாரிப்பாளர்களிடம் கைநீட்டினால் எதிர்விளைவுகள் பயங்கரமாக இருக்கும் என்பதை எச்சரித்து உணர்த்தி இருக்கிறோம். எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் கத்தி ஒரு பாடமாக அமைந்துவிட்டது.

**உங்கள் அமைப்பு கத்தி படத்தின் ரிலீஸில் கடைசி நேரத்தில் சமரசம் ஆகிவிட்டதாகக் குற்றச்சாட்டு கிளம்பியுள்ளதே?**

இனம் என்கிற உணர்வு தான் எங்களை வழிநடத்திச் செல்கிறது. ஈழத்தமிழர்களின் பிணக்குவியல் மீது நிற்கும் இரத்த வெறிபிடித்த இலங்கை அரசின் கூட்டாளி கொடுத்த பணத்தை வாங்கும் ஈனப்பிறவி கூட்டம் நாங்கள் அல்ல. இப்படி வதந்தி, புரளி கிளப்பும் துரோக கும்பல், சமரசம் ஆனதற்கான ஆதாரங்களை வெளியிட வேண்டும். தடா, பொடா போன்ற கொடூர சட்டங்களில் கைதாகி சிறை சென்ற தியாகசீலர்கள் இந்தக் கூட்டமைப்பில் இருக்கிறார்கள். எதற்கும் அஞ்சாத, எதிர்பார்க்காத தொண்டர்கள் எங்கள் அமைப்புகளில் இருக்கிறார்கள். எங்களுக்குப் பணம் பதவி ஒரு பொருட்டல்ல. பல்வேறு வழக்குகளை சந்தித்து இலட்சியத்துக்காக வாழ்கிறோம். தயாரிப்பாளர் லைக்கா நிறுவனத்தின் பெயரை நீக்க வேண்டும் என்பது தான் எங்கள் கோரிக்கை. எங்களது முடிவில் இறுதி வரை உறுதியாக இருந்தோம். எனவே, எப்படியாவது படத்தை வெளி யிட்டாக வேண் டும் என்று லைக்கா நிறுனம் தயாரிப்பாளர் நிலையில் இருந்து விலகியது.



படம் வெளியானது. நாங்கள் முதலில் வைத்த கோரிக்கை அப்படியே நிறைவேறி இருக்கிறது. முழு வெற்றி கிடைத்து விட்டது. யார் என்ன வேண்டுமானா லும் சொல்லிக்கொள்ளட் டும். நாங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது எங்கள் மனசாட்சிக்குத் தெரியும். எங்களின் மனசாட்சியாக இருக்கும மக்களுக்கும் தெரியும்!

**இதில் சம்பந்தம் இல்லாமல் ஜெயலலிதாவுக்கு நன்றி என்று விஜய் அறிக்கைவிட்டாரே... அது எதற்காக?**

எதற்காக நடிகர் விஜய், மக்களின் முதல் வர் அம்மாவுக்கு நன்றி சொன்னார் என்று எனக்குத் தெரியவும் இல்லை. புரியவும் இல்லை. இதுபற்றி அவர்தான் விளக்க வேண்டும்!

ஜூனியர் விகடன்

# ஒருவார காலத்தை துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு மனோ அழைப்பு

(கொழும்பு)

பதுளை - கொஸ்வத்தை - மீரியபெத்த தோட்ட கிராமத்தில் இடம்பெற்ற பாரிய இயற்கை அனர்த்தத்தில் உயிரிழந்த மலையகத்து உடன்பிறப்புகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக, எமது இல்லங்களிலும், அலுவலகங்களிலும் வெள்ளைக் கொடிகளை பறக்க விட்டு, கறுப்பு நிற உடை அணிந்து, நேற்று வியாழக்கிழமை முதல் ஒரு வார காலத்தை, துக்க தினமாக அனுஷ்டிப்போம் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணே சன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மரணித்தவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் அதேவேளை, துன்பத்தில் வீழ்ந்தவர்களுக்கு உதவிட தயாராவோம்.

நமது மக்களை காவு கொண்ட இயற்கை, மீட்புப் பணிகளையும் முன்னெடுக்க தடை போடுகிறது.

மீட்புப் பணிகளிலே படைத் துறையினர் உட்பட இடர் நிவாரண பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மீட்புப் பணிகள் இடையூறு இல்லாமல் நடைபெறவும், காயமடைந்தவர்கள் சிகிச்சை பெறவும், அநாதரவானவர்கள் அடைக்கலம் பெறவும் எம்மால் இயன்ற அனைத்து ஒத்துழைப்புகளையும், அனைத்து பேதங்களையும் புறந்தள்ளிவிட்டு வழங்க தயாராவோம்.

எமது உணர்வுகளை வெளிக் காட்ட எமது இல்லங்களி லும், அலுவலகங்களிலும், வர்த்தக நிலையங்களிலும் வெள்ளை கொடிகளை பறக்க விட்டு, கறுப்பு நிற உடை அணிந்து முதல் ஒரு வார காலத்தை, துக்க தினமாக அனுஷ்டிப்போம்.

அதேவேளை நிவாரண உதவிகள் பற்றிய தெளிவான கோரிக்கைகள் கிடைத்தவுடன், அந்த தேவைகளை வழங்க எங்களால் இயன்ற அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# விபச்சார விடுதி சுற்றிவளைப்பு; பெண் உட்பட மூன்று பேர் கைது

(கொழும்பு)

இனாமலுவ பிரதேசத்தில் இரகசியமாக நடந்து வந்த விபச்சார விடுதி ஒன்றினை கண்டுபிடித்த தம்புள்ள பொலிஸார் அங்கு ஒருபெண் உட்பட மூவரை கைது செய்துள்ளனர்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேகத்திற்கிடமாக காணப்பட்ட பெண் ஒருவரையும் விபச்சாரத்திற்கு யுவதிகளை பெற்றுக்கொடுக்கும் தரகர் எனக்கூறப்படுகின்ற நபர் ஒருவரையும் விடுதியின் உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் தம்புள்ள நீதிமன்றத்தில் ஆஜர்செய்த போது நீதவான் சஞ்சீவ ரம்யசிறி இவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜமாத் தலைவருக்கு மரண தண்டனை விதிப்பு

வங்கதேசத்தின் ஜமாத் -இ-இஸ்லாமி கட்சியின் தலைவர் மோதிர் ரகுமான் நிஜாமிக்கு அந்த நாட்டு சிறப்பு தீர்ப்பாயம் நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்தது.

1971 ஆம் ஆண்டு வங்கதேச விடுதலைப்போரின்போது ஜமாத் தலைவர்கள் பாகிஸ்தானுக்கு ஆதரவாகச் செயற்பட்டனர். அப்போது அவர்கள் ஆயிரக்கணக்கானோரை கொன்று குவித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பான வழக்குகளை சிறப்பு தீர்ப்பாயம் விசாரித்து வருகிறது.

ஜமாத் தலைவர் நிஜாமி (வயது-71) விடுதலைப் போராட்ட வீரரகள் பலரை படுகொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பான வழக்கை விசாரித்த சிறப்பு தீர்ப்பாயம் அவருக்கு நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

வங்கதேச போர் குற்றத்தில் தண்டனை பெற்றுள்ள 6 ஆவது ஜமாத் தலைவர் நிஜாமி. இந்த குற்றம் தொடர்பாக மேலும் இரு ஜமாத் தலைவர்கள் மீது விசாரணை நடைபெற்று வருகிறது. நிஜாமியின் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட வாய்ப்புள்ளதால் வங்கதேசத்தில் பதற்றம் நிலவுகிறது. (இ-5)

## எபோலாவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 13,700ஐ தாண்டியுள்ளது

ஆபிரிக்காவின் மேற்கு பகுதி நாடுகளான லைபீரியா, சியாரா லியோன், கினியா உள்ளிட்ட நாடுகளில் எபோலா நோய் வேகமாகபரவிவருகிறது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலும் பரவிவரும் இந்த நோய்க்கு சுமார் 5 ஆயிரம் பேர் இதுவரை பலியாகி உள்ளனர்.

இதனால் அதிர்ச்சியடைந்து வரும் உலக நாடுகள் எபோலா தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

எபோலா நோயால் இதுவரை 13 ஆயிரத்து 700 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்படுவதாவது,

எபோலா நோய் காரணமாக மேற்கு ஆபிரிக்க நாடுகளில் இதுவரை 13 ஆயிரத்து 700 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் லைபீரியா, சியாரா லியோன் மற்றும் கினியா கொனாக்ரி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது என்று தெரிவித்துள்ளது.

எபோலாவுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அவுஸ்திரேலியா முதற்கட்டமாக மேற்கு ஆபிரிக்க நாட்டினருக்கு விசா வழங்குவதை இரத்து செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வறுமையால் வாடும் இஸ்ரேல் குழந்தைகள்



ஐ.நா. சபையின் 'யுனிசெப்' நிறுவனம் செல்வச் செழிப்புமிக்க 41 பணக்கார நாடுகளில் வறுமையால் வாடும் குழந்தைகள் குறித்த கணக்கெடுப்பு நடத்தியது.

அதில், இஸ்ரேல் 4 ஆவது இடம் பிடித்துள்ளது. அங்கு 35.1 முதல் 35.6 சதவீதம் குழந்தைகள்பசியால்வாடுகினறனர். அதே நேரத்தில் கிரீஸ் (40.5 சதவீதம்), முதல் இடத்திலும், லாத்வியா (38.2 சதவீதம்) 2 ஆவது இடத்திலும், ஸ்பெயின் (36.3 சதவீதம்) 3 ஆவது இடத்திலும் உள்ளன.

பணக்கார நாடுகளில் தற்போது வறுமையால்வாடும்குழந்தைகளின் எண்ணிக்கை 26 இலட்சம் ஆக அதிகரித்துள்ளது. இஸ்ரேலில் வறுமை அதிகரிக்க வேலையில்லா திண்டாட்டமே முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

அங்கு இளைஞர்களுக்கு நிலையான வேலைகள் கிடைக்காததால் அவர்களால் அதிக அளவு பணம் சம்பாதிகக முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் வறுமையில் வாழும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்த நாடுகள் பட்டியலில் நோர்வே முதலிடம் வகிக்கிறது. இங்கு 5.3 சதவீதம் குழந்தைகளே பசியால் வாடுகின்றனர்.(இ-5)

## பாகிஸ்தான் சிறுமி மலாலா காஸாவிற்கு நன்கொடை

**30 இலட்சம் வழங்கினார்**

பாலஸ்தீனத்தில் ஹமாஸ் தீவிரவாதிகள் ஆதிக்கத்தில் உள்ள காஸா பகுதியில் இஸ்ரேல் குண்டு வீசி தாக்குதல் நடத்தியது. அதில் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

பல நகரங்களில் கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாயின. மேலும் ஐ.நா.சபை நடத்தும் பல பள்ளிக் கூடங்கள் இடிந்து சேதமடைந்தன.

போர் நிறுத்த ஒப்பந்தம் காரணமாக அங்கு தற்போது அமைதி நிலவுகிறது. பாலஸ்தீனத்தின் காஸாவை சீரமைக்க சர்வதேச நாடுகள் நிதி உதவிகள்மற்றும்நன்கொடைகள் அளித்து வருகின்றன.

இந்த நிலையில் பாகிஸ்தான் சிறுமி மலாலா யூசுப் சாய் (17). காஸாவுக்கு 30 இலட்சம் ரூபா நன்கொடை வழங்கியுள்ளார்.

பாகிஸ்தானில் பெண்கள் கல்விக்காக போராடியதற்காக அவரை தலிபான் தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். இதனால் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த அவர் லண்டன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று உயிர் பிழைத்தார்.

சேவையை பாராட்டி சமீபத்தில் இவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பயங்கர ஒலி எழுப்பியது இராணுவ விமானங்கள்

இங்கிலாந்தின் கென்ட் பகுதியில் விமானப் பேக்குவரத்துக் கட்டுப்பாட்டை இழந்த லாட்வியன் கார்கோ விமானத்தை பத்திரமாக தரையிறக்க சென்ற இரண்டு ராயல் ஏர் போர்ஸ் இராணுவ விமானங்கள் வெடித்து சிதறியது போல பயங்கர ஒலி எழுப்பியதால் நேற்று முன்தினம் இரவு பரபரப்பு ஏற்பட்டது.

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட அண்டோனோவ் ஏ.என்-26 ரக கார்கோ விமானம் வாகன பாகங்களை ஏற்றிக்கொண்டு பர்மிங்காம் விமான நிலையத்திற்கு சென்றுகொண்டிருந்தது. இத்தாலியின் டோஸ்காரா பகுதியில் இருந்து புறப்பட்ட இந்த விமானம், கென்ட் பகுதியில் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டை இழந்தது.

விமானத்தை பத்திரமாக தரையிறக்கும் பொருட்டு அனுப்பப்பட்ட இரண்டு ராயல் ஏர் போர்ஸ் இராணுவ விமாணங்கள் வெடித்து சிதறியது போல பயங்கர ஒலி எழுப்பியதால் அச்சமடைந்த டார்ட்போர்ட் பகுதி மக்கள் பொலிஸாருக்கு தொடர்ந்து தகவல் தெரிவித்த வண்ணம் இருந்தனர். (இ-5)



நேற்று முன்தினம் வத்திக்கான் புனித பேதுறு சதுக்கத்தில் இடம்பெற்ற பொதுப்பார்வையாளர் சந்திப்பில் குழந்தையொன்றை அரவணைத்த போப்பாண்டவர் பிரான்சிஸ்...




## எல்லைக் காவலில் ஐரோப்பா கவனம்

ஐரோப்பாவுக்குள் நுழைய முயற்சிக்கும் வெளிநாட்டுக் குடியேறிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதால், இந்தப் பிரச்சினையை கையாள்வது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் எல்லைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் பிரசல்ஸில் கூடி ஆராய்கின்றனர்.

மத்திய தரைக்கடலில் ரோந்துப் பணியில் ஈடுபடும் பொறுப்பிலிருந்து இத்தாலி விலகிக் கொண்டுள்ள சூழ்நிலையில் இந்த கூட்டம் நடக்கின்றது.

பிரிட்டனும் மத்திய தரைக்கடல் பிராந்தியத்தில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளுக்கு வழங்கிவந்த ஒத்துழைப்பை கைவிடுவதாக வெளியுறவுச் செயலகம் கூறியுள்ளது.

இப்போது இந்தப் பணி ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறிய செயலணி ஒன்றிடம் ஒப்படைக்கப்படுகின்றது.

எனினும் இந்த செயலணி தேடுதல் மற்றும் மீட்புப்பணிகளில் ஈடுபடுவதிலும் பார்க்க எல்லைக் காவல் நடவடிக்கையிலேயே கூடுதல் கவனம் செலுத்தவுள்ளது.

இதனிடையே, நடுக்கடலில் அதிகளவான மக்களை பலியாகச் செய்து, வெளிநாட்டுக் குடியேறிகளை தடுக்கும் நடவடிக்கையை வெட்கக்கேடானது என்று ஐரோப்பிய அகதிகளுக்கான கவுன்சில் கூறியுள்ளது.

ஐரோப்பாவுக்குள் நுழையும் முயற்சியில் கிட்டத்தட்ட மூவாயிரம் பேர் கடந்த ஆண்டில் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இத்தாலிய கடற்படை சுமார் ஒன்றரை இலட்சம் பேரை காப்பாற்றியிருக்கிறது.

மக்கள் ஏன் ஐரோப்பாவுக்குள் தப்பிவர முயற்சிக்கிறார்கள் என்பதற்கான காரணங்களை கண்டறிந்து, அந்தப் பிரச்சினைகளை கையாள ஐரோப்பிய ஒன்றியம் பெருமளவில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஐரோப்பிய அகதிகளுக்கான கவுன்சில் கூறியுள்ளது. (இ-5)

## 51 நாடுகளின் ஒப்பந்தத்தில் இந்தியா பங்கேற்கவில்லை

ஜேர்மன் தலைநகர் பெர்லினில், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பு ஏற்பாடு செய்த கூட்டம் நடைபெற்றது.

அதில, கறுப்புப் பணம் பதுக்கல் தொடர்பான தகவல்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள உறுதி அளிக்கும் ஒப்பந்தம் பற்றி விவாதிக்கப்பட்டது. பின்னர் அதில் கையெழுத்திடப்பட்டது.

51 நாடுகள் கையெழுத்திட்டன. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளும், கறுப்பு பணம் பதுக்கலுக்கு ஒத்துழைக்கும் லிச்சென்ஸ்டீன், பிரிட்டிஷ் விர்ஜின் தீவுகள், கேமன் தீவுகள் உள்ளிட்ட நாடுகளும் இதில் கையெழுத்திட்டுள்ளன.

ஆனால், இந்தியா இந்த கூட்டத்தில் பங்கேற்கவில்லை. அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடா விட்டாலும், கறுப்புப் பண தகவல்களை பகிர்ந்துகொள்வதாக உறுதி அளித்தது.(இ-5)

## பால் அதிகமாக அருந்தினால் ஆயுள் குறைய வாய்ப்புள்ளது

தினமும் ஒன்றரை கப்-க்கு மேல் பால் அருந்துவது ஆயுளை குறைக்கும் என ஆராய்ச்சியில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. சுவீடன் நாட்டின் உப்சலா பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர். கார்ல் மைக்கேலசன் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் குழு பாலில் லாக்டோஸ் மற்றும் கிளாக்டோஸ் இனிப்பு அதிகம் காணப்படுவதால் அதை அதிகமாக பருகினால் எதிர் விளைவுகள் ஏற்படும் என எச்சரித்துள்ளனர்.

கடந்த 20 ஆண்டுகளாக 39 முதல் 74 வயது வரை 61 ஆயிரம் பெண்களிடமும், 45 முதல் 79 வயது வரை 45 ஆயிரம் ஆண்களிடமும் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் தினமும் ஒன்றரை கப்பிற்கும் அதிகமாக பால் அருந்தியவர்கள மற்றவர்களை விட சீக்கிரமே இறந்துவிடுவது கணடறியப்பட்டுள்ளது. மேலும், அதிகமாக பால் அருந்துவது எலும்பு தேய்மானத்தை ஏற்படுத்தும்என அந்த ஆய்வு கூறுகிறது.

எனினும் குறைந்த அளவு லாக்டோஸ்கொண்டபால்அருந்துவதால் எந்த ஆபததும் இல்லை என ஆராய்ச்சியாளர்கள்தெரிவித்தனர். (இ-5)

**குர்து இன பாடசாலை மாணவர்கள் 25 பேரை விடுவித்தது ஐ.எஸ்.ஐ.எஸ்.**

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் கடத்தப்பட்ட குர்து இன பாடசாலை மாணவர்கள் விடுவிக்கப்பட்டதாக ஐ.நா.கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது.

சிரியாவில் கடந்த மே மாதம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால கடத்தப்பட்ட 150 பாடசாலை மாணவர்களுள் 25 பேர்விடுவிக்கப்பட்டதாக அங்கிருக்கும் ஐ.நா.கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளதாக சினுவா செய்தி நிறுவனம் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

குர்து இனமக்களை நோக்கி நடத்தப்பட்ட தாக்குதலில் அலிபோ நகரை வசப்படுத்திய ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு அங்கு மாணவர்களை [illegible] குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணக்கோண மலையேறி
கோப்பிப் பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சென்னு
உதைச்சாளையா சின்னத்துரை -மலையக நாட்டார் பாடல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழர்கள் என்றால் இலங்கை மண்ணுக்குப் பிடிக்காது போலும்

பதுளையில் நடந்த மண்சரிவில் மலையகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் அறிந்து இதயம் நொந்து போயிற்று.

உரிமையும் இல்லை. உறைவிடமும் இல்லை. தேயிலைச் செடிகளை நுள்ளி நுள்ளி வயிற்றுப் பசியைப் போக்குவதைத் தவிர வாழ்வில் வேறெந்த உயர்வும் இல்லை என்ற நிலையில் வாழ்கின்ற நம் மலையகத் தமிழ் மக்களை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சம் நெருடிக்கொள்ளும்.

உங்களைப் பெற்ற பாரதத் தாய் நாடும் புகுந்த இலங்கைத் திருநாடும் மட்டும் உங்களை ஏமாற்றி விடவில்லை.

தோட்டத்துரைமாரும் கட்சித் தலைவர்களும் ஆட்சிப் பேரினவாதிகளும் தங்கள் வஞ்சத்தை உங்கள் மீதே திணித்தனர். என்ன செய்வது? தமிழர் என்பதால் உயர்ந்த மலையிலும் தாழ்ந்த வாழ்க்கைத் தரம் உங்களுடையதாயிற்று.

ஓ! எமதருமை மலையகத் தமிழ் மக்களே!

இந்த நாட்டின் மண்ணுக்கு தமிழர்கள் என்றால் பிடிக்கவே பிடிக்காது. பேரினவாதிகளோடு சேர்ந்து எங்கள் இனத்தை அறுத்தாலே தனக்கும் பெருமை என்று இலங்கை மண் நம்புகிறது போலும்.

அதனால் அவர்கள் விட்டால், இந்த மண் தொடங்கி விடுகிறது எங்கள் இனத்தைப் புதைப்பதற்கு. கடவுளே! இலங்கைத் திருநாட்டில் எந்தப்பகுதி மண்ணைத் தோண்டினாலும் தமிழர்களின் உடல்கள் தான் வெளி வரும் என்பது விதியாயிற்றா?

மன்னாரில் தோண்டிய போது, வேலணையில் கிடங்கு வெட்டிய போது எம் இனத்தின் உயிரடங்கிய என்புகளே எழுந்து வந்தன.

இப்போது பதுளையில் நடந்த மண் சரிவில் மண்ணைத் தோண்டத் தோண்ட நம் மலையகத் தமிழ் மக்களின் உயிரற்ற உடலங்கள் வருகின்றதெனில் இந்த மண்ணும் எங்களை வஞ்சிப்பது தெரிகிறது அல்லவா?

பூமித் தாயே! உன்னிடமும் ஒரு நீதி இருக்க வேண்டும். எங்களுக்கு நீ செய்ததெல்லாம் நியாயமா? என்று ஒரு கணம் சிந்தித்துப்பார்.

மண் விடுதலைக்காகப் போராடிய எங்கள் வித்துக்களை உன்னில் விதைத்து நடுகல் இட்ட போது அதனை உடைத்தெறிய கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

உயிரற்றும் உயிரோடும் புதைக்கப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் உடல்களை நீ மறைத்து வைத்திருப்பது மட்டுமல்ல; கண்டெடுத்த மனித எச்சங்களுக்கு, மண்ணே உன்னால் ஆகையால் என்னில் புதைக்கப்பட்டவர்களின் எச்சங்கள் தான் இவையென்று சொல்ல வைத்தாய்.

இது மட்டுமல்ல பேரினவாதத்தின் பீடத்தினர் என்றால் அவர்களுக்குச் சமாதி கட்டி கந்தரோடையையும் புனித கதரக்கொட ஆக்குவாய்.

அட! எங்கள் மீது உனக்கேன் இத்துணை வஞ்சகம்? உன் வஞ்சகத்திற்கு எல்லை இல்லாமலா? பதுளையில் மண்சரிவு என்ற பெயரில் எங்கள் மலையகத் தமிழர்களையும் உன்னில் புதைத்து பேயாட்டம் செய்கிறாய்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல என்ற வள்ளுவன் உரையும் பொய்த்ததோ! நிலமகளே! உனக்கு எங்கள் மீது வெறுப்பிருக்கலாம், ஆனால் நாங்கள் தமிழினம். மண்ணைத் தாயாக மதிக்கும் உயர் இனம். இன்னார் செய்தாரையும் ஒறுத்து அவர் நாண நன்னயம் செய்யும் ஆண்ட இனம் என்பதை உனக்கு நிச்சயம் தெரியப்படுத்துவோம்.

அதுவரை பதுளை மண்சரிவில் பாதிக்கப்பட்ட அத்தனை மக்களுக்கும் எங்கள் உதவிக்கரம் நீளட்டும்.

இந்த கரங்கள் மண்ணில் சறுக்கி விழுந்த மலையக மக்களைத் தூக்கி விடட்டும்.

தமிழ் உறவுகளே ! உதவ முன்வாருங்கள்.

# நிலச்சரிவில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வைகோ வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில், நிலச்சரிவில் சிக்கியுள்ள மலையகத் தமிழர்களை மீட்கவும், உடைமைகளை இழந்து தவிக்கும் மக்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கவும், நிவாரண உதவிகள் வழங்கவும் இலங்கைக்கு இந்திய அரசு அறிவுறுத்த வேண்டும் என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையின் பதுளை மாவட்டத்தில் உள்ள மீரிய பெத்தை எனும் இடத்தில் மழையின் காரணமாக 29 ஆம் திகதி ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி பல தமிழர்கள் புதையுண்டு உயிர் இழந்தனர். மேலும், 500 தமிழர்களைக் காணவில்லை என்ற அதிர்ச்சிகரமான தகவல்கள் வருகின்றன.

மலையகத் தமிழர்கள் வாழும் தேயிலைத் தோட்டக் குடியிருப்புகள் மண்சரிவு அபாயம் உள்ளவை என்று பல ஆண்டுகளுக்கு முன்பே சுற்றுச் சூழல் பாதுகாப்பு மையம் எச்சரித்து இருந்தது. ஆயினும், தேயிலைத் தோட்டங்களில் வாழும் மலையகத் தமிழர்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியேற்ற இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் தங்கள் ரத்தத்தைச் சிந்தி தேயிலை, கோப்பி தோட்டங்களை உருவாக்கியவர்கள். கடும் உழைப்பைக் கொடுத்து இன்றும் இலங்கையின் வளமான பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பவர்கள்.

அவர்கள் பல தலைமுறைகளாக மலையகத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களாக வாழ்ந்து வந்த போதிலும், 1948 ஆம் ஆண்டு இலங்கை அரசு கொண்டு வந்த குடியுரிமைச் சட்டத்தாலும், 1964 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்தியப் பிரதமர் சாஸ்திரி- இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்க ஒப்பந்தத்தாலும் பத்து இலட்சம் பேர்களது குடிஉரிமை பறிக் கப்பட்டு, நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர். உலகிலேயே வேறு எங்கும் இந்தக் கொடுமை நடக்கவில்லை.

இலங்கை அரசின் வஞ்சகத்தாலும், பாரபட்சமான அணுமுறையினாலும் வாழ்வுரிமைகளை இழந்த மலையகத் தமிழர்களை இயற்கையும் வஞ்சிக்கின்றது.

நிலச்சரிவில் சிக்கியுள்ள மலையகத் தமிழர்களை மீட்கவும், உடைமைகளை இழந்து தவிக்கும் மக்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கவும், நிவாரண உதவிகள் வழங்கவும் இந்திய அரசு அறிவுறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன் என தனது அறிக்கையில் வைகோ மேலும் தெரிவித்தார். (இ-5)

## இலங்கை மீனவர்கள் இந்தியாவால் கையளிப்பு

(சென்னை)

இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இந்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுவிடுவிக்கப்பட்ட மாத்தளையை சேர்ந்த 15 மீனவர்களையும் இலங்கை கடற்படையினரிடமிருந்து நேற்று வியாழக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள பிரதிப் பணிப்பாளர் நடராசா கணேசமூர்த்தி தெரிவித்தார்.

விடுவிக்கப்பட்ட இந்த இலங்கை மீனவர்கள் இந்திய கடற்படையினரால் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்திய கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டிலே மேற்படி மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# வடகொரியாவில் 50பேர் படுகொலை

தென் கொரிய நாட்டு டி.வி. சீரியல்களை பார்த்ததற்காக வட கொரியாவில் பல்வேறு கட்சிகளை சேர்ந்த 50-க்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டதாக தென் கொரிய உளவுத்துறை தகவல் தெரிவித்துள்ளது.

வட கொரியாவில் தென் கொரிய நாட்டு படங்கள், வீடியோ பதிவுகள், மெமரி கார்டுகள் உள்ளிட்ட பல பொருட்களின் விற்பனைக்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.

ஆனால் அங்கு தென் கொரிய நாட்டு வானொலிகள் போன்ற சாதனங்கள் கறுப்பு சந்தை வழியாக விற்கப் படுகின்றன.

இதனை தடுக்க பல வகையான நடவடிக்கைகள் அங்கு எடுக்கப்பட்டு வருகன்றன. இருப்பினும் தென் கொரிய படங்கள் அங்கு மக்கள் மத்தியில் பிரபலமடைந்து வருகின்றன.

இந்த நிலையில் 2014-ம் வருடத்தில் தென் கொரிய சீரியல்களை இணையம் வழியாக விதிமுறைகளை மீறி பார்த்ததற்காக பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்த 50-க்கும் மேற்பட்டோர் பொது இடத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டதாக தென் கொரிய உளவுத்துறை தகவல் தெரிவித்துள்ளது.

வட கொரியாவில் கடந்த சில மாதங்களில் காணாமல் போன சிலர குறித்து தகவல் தெரியாத நிலையில அவர்கள் இந்த படுகொலையில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று உள்நாட்டு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ)

## அமைதியின் சொற்கள்

நிம்மதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அளவுக்கும் செல்வத்திற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை.

# திருமண வீட்டில் கொள்ளை 10பவுண் தங்க நகை அபேஸ்

## பெரியஇத்திமடுவில் சம்பவம்

(முள்ளியவளை)

வீட்டின் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் 10 பவுண் நகைகள், 5 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை திருடியதுடன் வீட்டிலிருந்த ஒருவரையும் கத்தியால் தாக்கி காயப்படுத்திய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பெரியஇத்திமடு, தட்டாமலை கிராமத்திலுள்ள திருமண வீட்டில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வீட்டில் இருந்தவர்கள் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த சமயம் பார்த்து ஜக்கெட், சப்பாத்து அணிந்த 7 பேர் கொண்ட திருட்டுக்கும்பல் வீட்டின் வேலியைப் பிரித்து வீட்டுக் கதவை உடைத்து, கத்தி, கோடரி, கூரிய ஆயுதங்கள் சகிதம் உள் நுழைந்தவர்கள் அறையின் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தாலிக்கொடி, சங்கிலி, மோதிரம், காப்பு ஆகிய நகைகளையும் 5 ஆயிரம் ரூபாய் பணத்தையும் எடுத்துக் கொண்டனர்.

திருடர்களின் நடமாட்டத்தை அறிந்து கண்விழித்த வீட்டார் கூக்குரலிட்டனர்.

இதனையடுத்து வீட்டிலிருந்த தெய்வேந்திரம் துஷ்யன் (வயது 27) என்பவரை கால், கை, தலை போன்ற இடங்களில் கத்தியால் தாக்கி காயப்படுத்தினர்.

இதன்பின்னர் விசில் ஓசை வெளியிலிருந்து வரவே அங்கிருந்து திருட்டுக் கும்பல் வெளியேறித் தப்பிச் சென்றது.

உடனடியாக நெடுங்கேணி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை மேற்படி சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் குறித்த கும்பல் பெரியஇத்திமடு அ.த.க. பாடசாலையை உடைத்து சேதப்படுத்தியதோடு பொருட்களையும் நாசமாக்கியுள்ளது.

இந்நிலையில் காயமடைந்த தெய்வேந்திரம் துஷ்யன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-2-300)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### யாரை சொர்க்கம் தேடுகிறது?

★ ஒரு அநாதை அழுகின்ற சமயம, அவன் அழுவதற்கு காரணமானவனுக்காக நரகம் விரிவடைகிறது. அவனை சிரிக்க வைப்போருக்காக சொர்க்கம் விரிவடைகின்றது என்று இறைவன் கூறுகின்றான்.

★ மோசடி செய்பவன், கஞ்சன், கொடுத்த தர்மத்தைச் சொல்லிக் காட்டுபவன் ஆகியோர் சொர்க்கம் நுழையமாட்டார்கள்.

★ உங்களைப் படைத்த இறைவனை நேசிக்கிறீர்களா? முதலில் உங்களைப் போன்ற மனிதர்களை நேசியுங்கள்! அப்பொழுது தான் உங்களுக்கு இறைவன் நேசம் கிடைக்கும்.

★ ஒரு மனிதனைப் பற்றி விசாரிக்காதீர். அவனுடைய நண்பனை தெரிந்து கொள்ளுங்கள்! ஏனென்றால் ஒவ்வொருவரும் தனது நண்பனைத் தான் பின்பற்றுவான்.

★ இவர்களை சொர்க்கம் தேடுகிறது. 1. திருக்குர்ஆனை ஓதுபவர், 2. தேவையற்ற பேச்சை பேசாமல் தம் நாவை பேணுபவர், 3. பசித்தவர்களுக்கு உணவளிப்பவர், 4. ரம்ழான் மாதத்தில் நோன்பு நோற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ஒருநாள் தொடரில் நாங்கள் தயக்கம் காட்டவில்லை

## மத்யூஸ்



இலங்கை கிரிக்கெட் அணியின் கப்டன் மத்யூஸ் மும்பையில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது,

இந்திய ஒரு நாள் தொடரில் விளையாடுவதற்கு நாங்கள் தயக்கம் காட்டவில்லை. ஆனால் இந்தியா போன்ற நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கு ஏற்ப நாங்கள் மிகச்சிறப்பான முறையில் தயார் ஆகவில்லை. இந்திய கிரிக்கெட் மண்ணில் கிரிக்கெட் ஆடுவது எவ்வளவு கடினமானது என்பது எங்களுக்கு தெரியும்.

அதுவும் இந்தியாவை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்வதற்கு மிக உயரிய நிலையில் ஆயத்தமாக வேண்டியது அவசியம். கடந்த 11/2 மாதங்களாக நாங்கள் எங்களது உடல் தகுதியில் மட்டும் கவனம் செலுத்தி வந்தோம். எதிர்வரும் இங்கிலாந்து தொடரின் போது உச்சகட்ட நிலைக்கு வர வேண்டும் என்று திட்டமிட்டோம்.

ஆனால் திடீரென இந்த தொடர் வந்து விட்டதால் அதை கவனத்தில் கொள்ள வேண்டியதாகி விட்டது. எது எப்படி என்றாலும் அதற்கு ஏற்ப எம்மை சீக்கிரம் மாற்றிக் கொள்ள வேண்டும் டோனி இந்திய அணியின் தூண் ஆவார்.

அவர் அபாயகரமான வீரர் என்பதை அறிவோம். இந்திய அணியில் அவர் இல்லாவிட்டால் அதை எதிரணி தங்களுக்கு கூடுதல் வாய்ப்பாக நினைக்க கூடும். ஆனால் அவர் இல்லாவிட்டாலும் இந்திய அணியை குறைத்து மதிப்பிட முடியாது.

சிறந்த துடுப்பாட்ட வீரர்கள், சிறந்த பந்து வீச்சாளர்கள், சிறந்த களத்தடுப்பாளர்கள் என்று இந்திய அணி சரியான கலவையில் அமைந்துள்ளது. ஹெரத்துக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

காயத்தால் மலிங்க இடம்பெறவில்லை. இவர்கள் இருவரும் எங்களது பந்து வீச்சின் முதுகெலும்பு ஆவர்.

அணியில் அனுபவம் வாய்ந்த வீரர்கள் நிறைய பேர் இல்லை. கிரிக்கெட் ஆடுவதற்கு இது கடினமான இடம் என்றாலும் இந்த சுற்றுப் பயணத்தின் மூலம் பாடம் கற்றுக் கொள்வோம். கடந்த காலங்களில் இந்திய மண்ணில் எங்களுக்கு கிடைத்த அனுபவங்கள் நல்லதாக இல்லை. ஆனால் இந்த தடவை அவற்றை மாற்றிக்காட்ட முயற்சிப்போம். இவ்வாறு மத்யூஸ் கூறினார். (க)

# டோனி அதிசயமானவர்



டோனி ஒரு அதிசயமானவர். நான் பார்த்த வகையில் அவர் உலகின் சிறந்த வீரர்களில் ஒருவர் ஆவார். மிகவும் முக்கியமான 20 ஓவர் உலக கோப்பை ஐ.சி.சி.உலக கோப்பை மற்றும் ஐ.சி.சி சம்பியன்ஸ் டிராபி ஆகியவற்றை டோனி கைப்பற்றி உள்ளார்.

இந்திய கிரிக்கெட்டில் அவர் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் கிரிக்கெட்டுக்காக ஏராளமாக செய்துள்ளது.

பல்வேறு கிரிக்கெட் வீரர்கள் இங்கு பணிபுரிகிறார்கள்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி)தலைவர் சீனி வாசன் போட்டி ஒன்றில் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐ.பி.எல். சூதாட்ட விவகாரத்தில் என்.சீனிவாசன் இந்திய கிரிக்கெட் வாரிய தலைவர் பதவியில் இருந்து ஒதுங்கி இருக்கிறார். ஐ.பி.பல். அணிகளில் ஒன்றான சென்னை சுப்பர் கிங்சின் உரிமையாளர் ஆவார். (க)




# வடக்கு லீக்கிற்கிடையிலான உதைபந்தாட்ட போட்டி



வடமாகாணத்திலுள்ள உதைபந்தாட்ட லீக்குகளுக்கு இடையே ஓர் சிறப்பு உதைபந்தாட்ட போட்டி ஒன்றினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இது தொடர்பிலான ஓர் கலந்துரையாடல் அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

லீக் மட்டத்தில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. புள்ளிகள் அடிப்படையிலும் அதில் முதலிடம் பெறும் எட்டு அணிகள் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கழகங்கள் இப் போட்டித் தொடருக்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் யாழ்ப் பாணம், பருத்தித்துறை, வடமராட்சி, வலிகாமம், தீவகம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய லீக்குகள் காணப்படுகின்றன. (க)

# ஐ.சி.சி ஒரு நாள் தரவரிசை டிவில்லியர்ஸ் முதலிடம்



சர்வதேச ஒருநாள் துடுப் பாட்ட தரவரிசையில் இந் திய அணியின் நட்சத்திர வீரர் கோலி பின்னடைவை சந்தித்துள்ளார்.

சர்வதேச ஒரு நாள் அரங்கில் சிறந்து விளங் கும் வீரர்களுக்கான தர வரிசை பட்டியலை ஐ.சி. சி., வெளியிட்டது. தென் ஆபிரிக்கா-நியூசிலாந்து அணிகள் இடையி லான ஒருநாள் போட்டி தொடர் முடிந்ததை தொடர்ந்து இந்த தரவரி சைப்பட்டியல் வெளியிடப்பட்டு இருக்கிறது.

இதன்படி துடுப்பாட்ட தரவரிசையில் தென் ஆபிரிக்க வீரர் டிவில் லியர்ஸ் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். தென் ஆபிரிக்க வீரர் ஹசிம் அம்லா ஒரு இடம் முன்னேறி 2 ஆவது இடத்தை பிடித்து இருக்கிறார். இந்திய வீரர் விராட்கோலி ஒரு இடம் பின்தங்கி 3 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இந்திய அணித்தலைவர் டோனி 6 ஆவது இடத்தில் தொடருகிறார். ஷிகர் தவான் இரு இடம் சரிந்து 9 ஆவது இடம் பெற்றுள்ளார். பந்துவீச்சாளருக்கான தரவரிசையில் முதலிடத்தில் பாகிஸ்தா னின் சயீத் அஜ்மல் உள்ளார். மேற்கிந்திய தீவுகளின் நரைன், தென் ஆரிக்காவின் ஸ்டைன் 2,3 ஆவது இடத்தை வகிக்கின்றனர். இந்தியாவின் சுழல் வீரர் ஜடேஜா, வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் முறையே 6,7 ஆவது இடத்தில் நீடிக்கின்றனர்.

அணிகளுக்கான தரவரிசையை பொறுத்த வரை தென்ஆபிரிக்க அணி ஐந்து ஆண்டுகளுக்குப்பின் முதலிடத்தை எட்டிப்பிடித்துள்ளது. இதற்கு முன் கடந்த 2009 செப்டெம்பரில் முதலிடத்தில் இருந்தது.

அவுஸ்திரேலியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்திய அணி தொடந்து மூன்றாவது இடத்தில் நீடிக்கிறது. (க)

# இந்திய அணிக்கு திரும்புவது கடினமாகி போய் விட்டது

## யுவராஜ்சிங்



இந்திய கிரிக்கெட் அணியில் விளையாடுவது குறித்து விரக்தியாக பேசியுள்ளார் அதிரடி ஆட்டக்காரர் யுவராஜ்சிங்.

கடந்த 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி மகுடம் சூட முக்கிய காரணமாக விளங்கிய அதிரடி துடுப்பாட்ட வீரர் யுவராஜ்சிங், அந்த போட்டியில் தொடர்நாயகன் விருதும் பெற்றார்.

பின்னர் புற்று நோய் தாக்குதலுக்கு ஆளாகி சிகிச்சை பெற்று களம் திரும்பிய யுவராஜ்சிங்கின் ஆட்டத்தில் பழைய சிறந்த நிலையை காண முடியவில்லை.

இதனால் இந்திய அணியில் இடம் பிடிக்க முடியாமல் தவித்து வரும் யுவராஜ்சிங், கடைசியாக ஒருநாள் போட்டியில் கடந்த ஆண்டில் நடந்த தென் ஆபிரிக்க தொடரில் விளையாடினார்.

20 ஓவர் போட்டியில் கடந்த ஏப்ரல் மாதம் நடந்த உலக போட்டியில் இடம்பெற்றார். அதன் பிறகு அவர் இந்திய அணிக்கு தெரிவு செய்யப்படவில்லை. தொடர்ந்து ஓரம் கட்டப்பட்டு வருகிறார். இந்நிலையில் யுராஜ்சிங் அளித்த பேட்டியல், இந்திய அணிக்காக இனிமேல் நான் ஒருபோதும் விளையாட முடியாத நிலை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

அதனை நான் கவனத்தில் கொண்டு தான் இருக்கிறேன். இருப்பினும் இந்திய அணிக்காக மீண்டும் விளையாடவும் வாய்ப்பு இருக்கிறது. அணிக்கு திரும்ப முடியும் என்று நான் எவ்வளவு தூரம் நம்புகிறேனோ, அந்த நம்பிக்கையை எந்த அளவுக்கு மனதில் வைத்து இருக்கிறேனோ அது என்னை இலக்கை எட்ட உந்தி தள்ளிக் கொண்டே இருக்கும்.

கடந்த 2 ஆண்டுகளாக ஆட்டத்தில் நான் ஏற்ற, இறக்கங்களை சந்தித்து வருகிறேன். எனவே என்னை அணிக்கு தெரிவு செய்ய வேண்டும் என்று நான் சொல்லவில்லை.

ஆனால் இந்த நிலைமைகள் மாறும், அணியில் மீண்டும் இடம் பிடிப்பேன் என்ற நம்பிக்கையை நான் இழக்கவில்லை. தேர்வு பற்றி நான் எதுவும் சொல்ல முடியாது. ஆனால் என்னால் முயற்சி செய்ய மட்டுமே முடியும். அதனை தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறேன்.

இந்திய அணியில் இடம் பிடித்து உலக க்கிண்ண போட்டியில் மீண்டும் நான் விளையாடினால் அது மிகப் பெரிய விடயமாக இருக்கும்.

ஆனால் அது நடக்காமல் போனாலும் வாழ்க்கை கடந்து கொண்டு தான் இருக்கும். இந்திய அணியில் இடம் பிடிக்காமல் போனால் அது மனதுக்கு கஷ்டமாக தான் இருக்கும் என்றும் ஆனால் அதனை ஏற்றுக்கொள்ள தான் வேண்டும் எனவும் கூறியுள்ளார். (க)

# கோல் கீப்பராக அசத்திய டோனி

ஐ.எஸ்.எல் காற்பந்து தொடரில் நேற்று முன்தினம் நடந்த சென்னை-மும்பை போட்டியின் போது டோனி கோல்கீப்பராக செயற்பட்டு அசத்தினார்.

சென்னையின் எப்.சி அணியின் உரிமையாளர்களில் ஒருவராக இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் டோனி இருக்கிறார்.

இவர் நேற்று முன்தினம் மும்பை- சென்னை போட்டி முடிந்த பிறகு கோல் கீப்பராக செயற்பட்டு பெனால்டி கோலை சுப்பராக தடுத்தார். இதற்கு முன்பு நடைபெற்ற இந்த போட்டியில் சென்னை அணி கோல் மழை பொழிந்தது. (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகவிய...

ஸாருக்குமிடையே பெரும் முறுகல் இடம் பெற்றுள்ளது.

ஊடகவியலாளரினை தாக்கிய பொலிஸாருக்கு எதிராக புகைப்படத்துடன் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஓட்டுமடப் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற தனியார் பேருந்து துவிச்சக்கர வண்டி விபத்தில் செய்தி சேகரிப்பதற்கு சென்ற வலம்புரி பத்திரிகையின் ஊடகவியலாளரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவத்தினை ஊடகவியலாளர் படம் பிடித்துக் கொண்டிருந்த பொழுது அங்கு வந்த சிவில் உடை தரித்த யாழ்.போக்குவரத்து பொலிஸார் கமராவினை பறித்த மிரட்டியதோடு தாக்கியுமுள்ளனர்.

இதன்போது தன்னை ஊடகவியலாளர் என இனங்காட்டிக் கொண்ட பின்னரும் சிவிலுடையணிந்த பொலிஸார் ஊடகவியலாளரினை தாக்கியிருந்தனர்.

இதன்போது பொதுமக்கள் சிலரினையும் பொலிஸார் தாக்கியிருந்தனர். இதனால் கடுங்கோபமடைந்த பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் விபத்தினை ஏற்படுத்திய பஸ்ஸை அடித்து நொருக்கியதோடு பொலிஸாருடன் கடும் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

போக்குவரத்து பொலிஸார் பொறுப்பற்ற முறையில் பக்கச் சார்பாக நடப்பதாகவும் குற்றஞ்சாட்டிய இளைஞர்கள் தமக்கு முன்பாகவே விபத்து தொடர்பில் வாக்கு மூலத்தினை பதிவு செய்யுமாறும் கோரி பஸ்ஸினை பொலிஸ் நிலையம் கொண்டு செல்ல விடாது தடுத்தனர்.

பொதுமக்களின் எதிர்ப்பினையும் மீறி பொலிஸார் பஸ்ஸினை கொண்டு செல்ல முயன்றதால் பொலிஸார் மீதும் பஸ் மீதும் பொதுமக்கள் கல்வீசித் தாக்குதல் மேற்கொண்டனர்.

இதனால் சம்பவ இடத்திற்கு இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு தடிகளாலும் பொல்லுகளாலும் தாக்கி பொதுமக்கள் அங்கிருந்து விரட்டப்பட்டனர்.

வலம்புரி பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் மீது மேற்கொண்ட தாக்குதல் குறித்து விரிவான விசாரணை மேற்கொண்டு குறித்த பொலிஸ் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதாக வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (4)

## இறுதிக்கிரியைக்கு ரூ.15 ஆயிரம்

(பதுளை)

கொஸ்லந்தை, மீரியபெத்த மண்சரிவினால், உயிரிழந்தவர்களின் இறுதிக்கிரியைகளுக்காக தலா 15ஆயிரம் ரூபாய்படி நிதி ஒதுக்கீடு செய்யுமாறும் அந்த நிதியை அவர்களின் உறவினர்களிடம் கையளிக்குமாறும் மாவட்ட செயலகங்களுக்கு, அரசாங்கம் பணித்துள்ளது.

## ஓட்டுமடத்...

நிறைமாத கர்ப்பிணிப் பெண்ணின் கணவருமான நிக்லஸ் டோமினிக் (வயது 45) என்பவரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் – மாதகல் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற 787 இலக்க தனியார் பேருந்து அரச பேருந்தோடு போட்டிக்கு ஓடியதனாலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மாதகல் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்றகொண்டிருந்த தனியார் பேருந்து ஓட்டுமடம் சுற்று வட்டத்தில் வீதி ஒழுங்கிற்கு மாறான பாதையில் மிக வேமாக சென்றுள்ளது.

இதன் போது வீதியின் குறித்த பகுதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த குடும்பஸ்தரினை மினிபஸ் மோதித்தள்ளி அதன் சில்லு குடும்பஸ்தரின் மேல் ஏறியமையினால் அவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

பஸ்ஸின் சாரதி அங்கிருந்து தப்பியோடி கே.கே.எஸ் வீதி தட்டாதெருச் சந்தியில் நின்று பஸ்ஸில் ஏறி சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளினை யாழ்.பொலிஸார் கொண்டு வருகின்றனர். (4)

## 8 பேருக்...

த்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபருக்கு அதிகாரம் இல்லை என அவர்கள் வாதிட்டனர்.

எனவே தாங்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் நீதிமன்றத்தில் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். ஆயினும் ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சாட்சியங்களை சமர்ப்பித்த அரச தரப்பு வழக்கறிஞர், சந்தேக நபர்கள் கைதுசெய்யப்படும்போது, அவர்கள் இலங்கையின் கடற்பரப்புக்குள் இருந்ததாக நிரூபிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை ஆராய்ந்த நீதிபதி, சந்தேக நபர்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.'எனவே சந்தேக நபர்களுக்கு மரண தண்டனை வழங்குவதாகவும் நீதிபதி உத்தரவிட்டார். இலங்கை வரலாற்றில் குற்றச்சாட்டொன்றை நிரூபிக்க ஜிபிஎஸ் தொழிலநுட்பம் பயன்படுத்தப்பட்டதென்பது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

தண்டனை விதிக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் சார்பில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் இத்தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யும் என இந்திய வெளியுறவுச் செயலர் செய்யது அக்பருதீன் தெரிவித்துள்ளார்.

## பேருந்துக்...

வாளங்கள் பெயர்க்கப்பட்டன. தண்டவாளத்தில் பல இடங்களில் தீவைக்கப்பட்டன. ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் 5 பேருக்கு தூக்கு தண்டனை விதித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடைபெறுகிறது. ராமேஸ்வரம்-மதுரை சாலையில் 20 இடங்களில் தீ வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பல ஆயிரம் பேர் திரண்டதால் தங்கச்சி மடம பகுதியில் பெரும் பரபரப்பு பதற்றம் நிலவுகிறது. மீனவர்களின் போராட்டத்தால் சென்னைக்கு புறப்பட வேண்டிய எக்ஸ்பிரஸ் ரயில் ராமேஸ்வரத்திலேயே நிறுத்தப்பட்டுள்ளது.

தூக்குதண்டனை விதிக்கப்பட்ட எமர்சன், பிரசாந்த், வில்சன், அகஸ்டஸ், லாங்லேட் என்ற 5 பேரும் ராமநாதபுரத்தை அடுத்துள்ள தங்கச்சி மடத்தை சேர்ந்தவர்கள் ஆவர். தூக்கு தண்டனை விதிப்பால் ராமேஸ்வரம் வட்டார மீனவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய நவம்பர் 14-ம் தேதி வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

## பொறுப்பை...

வெளியிடுகின்றோம்.

இலங்கை வரலாற்றில் பாரியளவிலான மண்சரிவு அனர்த்தம் இதுவாகும்.

எனினும் இதனை அரசாங்கம் சுனாமி அனர்த்தத்திற்கு நிகராக்க முயற்சிக்கின்றது. சுனாமியையும் இந்த மண்சரிவு அனர்த்தத்தையும் ஒப்பீடு செய்ய முடியாது.

ஆளும் கட்சியின் பிரதம கொறடாவின் கருத்து மூலம் அனர்த்தம் பற்றி ஏற்கெனவே அரசாங்கம் அறிந்திருந்தமை வெளிச்சமாகியுள்ளது.

என்ன சொன்னாலும் மக்களின் உயிரை அரசாங்கம் காப்பாற்றத் தவறியுள்ளது.

2005-ம் ஆண்டிலேயே குறித்த பிரதேசத்தை அபாயகரமான பிரதேசமாக பெயரிட்டால இத்தனை காலம் ஏன் பிரதேச மக்கள் தங்க வைக்கப்பட்டனர்? ஏன் அவர்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்படவில்லை? என ஜோன் அமரதுங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

## வெளி....

அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசாங்கத்திற்கு முடியும். சுனாமி போன்ற பாரிய அனர்த்தங்கள் ஏற்பட்டால் மாத்திரமே வெளிநாட்டு உதவிகள் தேவைப்படும்.

தற்போது அப்படியான உதவிகள் தேவைப்படாது. இதனை இலங்கையால் சமாளித்து கொள்ள முடியும் என்றார்.

300 பேருக்கும் அதிகமானோர் மண்ணில் புதையுண்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பல மீட்டர்கள் அளவுக்கு குவிந்துள்ள மண்ணைத் கனரக தோண்டும் வண்டிகளைக் கொண்டு நூற்றுக்கணக்கான துருப்பினர் தோண்டி வருக...

எத்தனை பேர் இந்... கியிருப்பார்கள் என்பது ... லாமல் இருந்துவருகிறது...

உயிரோடு யாரையும் ... நம்பிக்கை குறைந்துவரு... ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் கடுமையா... வந்த சூழலில் இந்த நிலச்ச... ளது.

மேலும் நிலச்சரிவுகள் ஏற்... அச்சம் காரணமாக அருகிலு... களில் இருந்து நூற்றுக்கணக்கா... அதிகாரிகள் அப்புறப்படுத்தியுள்...

அருகிலுள்ள தேயிலைத் தோ... றில் வேலைபார்த்துவந்த தொழில... தகரக்கூரை வீடுகள் புதன்கிழமை... ஏற்பட்ட பெரும் நிலச்சரிவில் ப... போயின.

வலம்புரி...
விளம்பரத் தொடர்பு...
021 221 7603 ,021 5...

## கூட்டமைப்புக்கு எதிரான ம... நீதிமன்றத்தினால் நிராகரி...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

வட மாகாணசபையைச் சேர்ந்த 28 உறுப்பினர்களும், கிழக்கு மாகாண சபையைச் சேர்ந்த 5 உறுப்பினர்களும் இவ்வாறு கடிதம் அனுப்பி வைத்திருந்தனர் என தெரிவித்து மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தேசமாமக தேசிய அமைப்பு என்ற அமைப்பினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.இலங்கை அரசாங்கப் படையினரை குற்றம் சுமத்தி குறித்த மாகாணசபை உறுப்பினர்கள் நவநீதம்பிள்ளைக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கடிதம் ஊடாக நாட்டின் அரசி... சாசனம் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்... டுள்ளது. குறித்த மாகாண சபை உறுப்பினர்... களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடுமாறும் மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கடிதம் அனுப்பி வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்படவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை செய்ய முடியாது என சட்ட மா அதிபர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார். முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் நியாயமான விசாரணை நடத்தாவிட்டால் மீண்டும் மனுவைத்தாக்கல் செய்ய முடியும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.



பதுளையில் மண்சரிவு ஏற்பட்டுள்ள மீரியபெந்த தோட்டத்தை பார்வையிட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று வியாழக்கிழமை கொஸ்லந்தை பகுதிக்குச் சென்றார். அங்கு சென்ற ஜனாதிபதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன் நிவாரணப் பொருள்களையும் வழங்கினார்.

இந்த விஜயத்தின் போது அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர, ஊவா மாகாண சபை முதலமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விசாரணைக்குழு அமைப்பு ஜனாதிபதி உத்தரவு

கொஸ்லந்த பிரதேசத்தில் இடம்பெற்ற மண் சரிவு அனர்த்தம் குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று பொலிஸ் மா அதிபரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஜனாதிபதி, சிறப்பு விசாரணைக் குழுவொன்றின் மூலமாக மேற்குறித்த விசாரணைகளை முன்னெடுக்குமாறு பணித்துள்ளார்.

மண்சரிவு அனர்த்தம் தொடர்பில் பொதுமக்கள் முன்கூட்டியே அறிவுறுத்தப்பட்டிருந்தார்களா? முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததா? அல்லது அதிகாரிகளின் அலட்சியம் காரணமாக இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதா? என்பது குறித்து விசாரணையின் போது விசேட கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரையை அடுத்து இது தொடர்பில் பொலிஸ் மா அதிபர் இலங்கக்கோன் விசேட விசாரணைக் குழுவொன்றை உடனடியாக நியமித்துள்ளார்.

சப்ரகமுவ மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தலைமையில் இந்த விசாரணைக்குழு செயற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பரில் 6 நாள் பூமி இருளில் மூழ்கும்

-நாசா

இந்த வருடம் டிசம்பர் மாதம் 16ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை உலகம் முழுதும் இருளாக தொடர்ந்து இருக்குமென நாசா நிறுவன தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த இருள் சூழ்ந்த நாட்களில் ஓர் பயங்கர சூரிய மண்டல புயல் வீசுமெனவும் அதனால் ஏற்படுகின்ற மாற்றத்தால் தூசி, துகள்கள் நிரம்ப போவதால் சூரிய ஒளி பூமிக்கு வருவது தடைப்படும் என்றும் அவர் கூறுகின்றார்.

நாசாவின் தலைவர் சார்ஸ் போல்டன் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சூரிய மண் லப் புயலால் பூமி இரு ...ந்தவித பாதிப்பும் பூமி ... ச வேண்டியது இல்லை. ...ளில் ஏற்படப் போகின்ற ...மண்டல புயலாகும். ...ாலங்கள் தொடர்ந்து இருள் ... நாட்கள் பூமியில் மின் விள ... செயலாற்ற வேண்டி வரும் ...டார். ...மாக மேலதிக விபரங்களை ...ாயத்தளத்தில் பார்வையிட ...விஞ்ஞானி ஏர்ல் கொடோயில் ...றார்.

# ...ந்தனை...

...ன் கீ மூன் யுத்தத்தின் பின்னர் ...க்கு விஜயம் செய்திருந்த போது ..., 13-ம் திருத்தச் சட்டத்தை அமுல் ...கவும், விரிவான பேச்சுவார்த்தை ...ும் எனவும் உறுதிமொழி அளி ...ன்பது குறிப்பிடத்தக்கது.

...கள் தனி இராச்சிய கோரிக்கை ...வில்லை எனவும், அர்த்தமுள்ள ...கிர்வு தீர்வுத் திட்டமொன்றை ...வேண்டுமென்றே கோருவதாக ...ன் சுட்டிக்காட்டியுள்ளார்.

...க்கள் சமத்துவமான இலங்கை ...வ வாழ விரும்புகின்றனர் என அவர் ...ுள்ளார்.

...சுவார்த்தைகளின் மூலம் தீர்வு ...விரும்புவதாகவும் எனினும் இந்த தீர் ...ட்டம் கௌரவமானதாக இருக்க ...ண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு தரப்பு பேச்சுவார்த்தைகளில் இணக்கப்பாடு எட்டப்பட்டால் மட்டுமே பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

# மோடி கவலை...

எனினும் இயற்கை அனர்த்த நிலைமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பினதோ அல்லது வேறு தரப்பினரது உதவி அவசியமில்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை...

பிரதம நீதியரசர் மீது கொண்டு வரப்பட்ட குற்றவியல் பிரேரணையை நோக்கும் போது இலங்கையின் நீதித்துறை சுதந்திரம் தொடர்பில் சந்தேகம் எழுகிறது.

இலங்கையின் பயங்கரவாத தடைச் சட்டம், கருத்து சுதந்திரமின்மை, கைதுகள், சிறையடைப்பு, சித்திரவதைகள் என்பன தொடர்பில் குழு தமது கவலையை வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில் இலங்கை குறிப்பிட்ட விடயங்களில் தமது முன்னேற்றத்தை கொண்டு வரவேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

# 192 பேரை காணவில்லை

பதுளை, ஹல்துமுல்லையில் நேற்று மு... தினம் இடம் பெற்ற மண்சரிவில் சிக்கி 192 பேர் காணா மல் போயுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. காணமல் போனவர்களை மீட்கும் பணி து...தமாக இடம்பெற்று வருவதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

அமெரிக்க அதிஸ்ட விசா
இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இந்த வருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இறுதி சந்தர்ப்பம் - உடனே விரையுங்கள்
இன்னும் 3 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்
அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு பதிவுகள் இடம்பெறும்

கிளிநொச்சி
A9 வீதி - பழைய ஆஸ்பத்திரி முன்னால்
0771516537
யாழ்ப்பாணம்
49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால்
0773867257
நெல்லியடி
முடக்காட்டுச்சந்தி
0776699892
வல்வெட்டித்துறை
யாழ்வீதி - வல்வெட்டி
0776697960
(8196)

குறைந்த கட்டணத்தில் V2 Travels and Tours (Pvt) Ltd
● அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள் ● உள்நாட்டு, வெளிநாட்டு துரிதபொதிகள் சேவை

ALLIANCE FRANÇAISE DE JAFFN...
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்...
af பிரெஞ்சு மொழி
கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்) 136 நாடுகளில் 1040 கிளைகள்.
ஆசிரியர்கள் : யாழ் பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO CDs ... BOOKS இலவசமாக பாவிக்கலாம் யாரும் படிக்கலாம் ... மாதங்களும் படிக்கலாம் LETTRE & PHOTOCOPIE இலவசம் ஆரம்பம் 02.11.2014
குறிப்பு வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்... நிறுவனம் AF மட்டுமே பொய் விளம்பரங்களை நம்பாதீர்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
கச்சேரி → புகையிரதகடவை → AF or ஆரியகுளத்திலிருந்து ...→ AF


The Peaceful Life Builders
கட்டிட நிர்மாணத்துறையின் முன்னோடிகள்
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் எமது நிபுணத்துவமிக்க பொறியியலாளர்களுடனும், அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களுடனும் உங்கள் பொருளாதாரத்திற்கு ஏற்ப அழகிய, பிரமாண்டமான நவீன வடிவமைப்புக்களுடன் வியாபார ஸ்தாபனங்களையும், கனவு இல்லங்களையும் குறைந்த செலவில் உங்கள் நேரடிக் கண்காணிப்பின் கீழ் நாம் நனவாக்கி கொள்கின்றோம்.
077 202 0634
RAM BUILDERS
The Peaceful Life Builders
: Sri vakeeswary Road, Kondavil North, Jaffna.
(8197) : 077 516 0036 : rambuilders2013@gmail.com

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
After A/L
What Next???
இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது
Spoken English With Grammar - Quick Learning Course
Duration: (1 1/2 Months)
• சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
• கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
• விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
• ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.
Diploma In English
Duration: (2 Months)
தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும் சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.
B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும்.
Duration: (2 Months)
IELTS Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.
We gurantee success rate 6.5 band and above
A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
Duration: (2 Months)
01st Saturday 2014@8.00am
02nd Sunday 2014@11.00am
03rd Monday 2014@09.00am
05th Wednesday 2014@03.00pm
No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel :021 222 4550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 07...

பொருளியல்
S.ஜெயகுமார்
B.A (Hons) Eco Spl,
M.A in Eco (Pera) P.G.D.E
A/L-2015
பேரினப் பொருளாதாரச் சமநிலை
A/L-2016
பொருளாதார அறிமுகம் (மீட்டல்)
ஆரம்பம்:-01.11.2014 சனி 11.00A.M
DCM நகர்
(சி-8920)

விற்பனைக்கு
யாழ்/வன்னி போன்ற இடங்களில் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
0757355821
(சி-8919)


# ஞாயிற்றுக்கிழமைகளில் திசைகாட்டிக்கு விடுமுறை

எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் திசைகாட்டி ஓய்வாக இருக்கும் என்பதை அனைத்து அன்புள்ளங்களுக்கும் அறியத்தருகின்றோம்.

ஏனைய 6 நாட்களும் (அரச பொது விடுமுறை தினங்கள் உட்பட) காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை உங்கள் வருகைக்காக திறந்திருக்கும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

செல்வி V.இந்துஜா
பிரதம நிறைவேற்று அதிகாரி

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016,
பதிவு இலக்கம்:-PV 82703
(சி-892...)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org